பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 25 சனிக்கிழமை 09.01.2021 கதிர் 65

### இனி இது ரகசியம் அல்ல!

முன்னைய தமிழக அரசியல் குறித்து நம் மத்தியல் ஒரு பேச்சு அடிபடுவதுண்டு.

புதிதாக வருகின்ற முதலமைச்சரின் இழிசெயலால் அதற்கு முதல் இருந்தவர் ‘நல்லவர்’, ‘தேவலை’ என்று பெயர் எடுத்து விடுவார் என்பார்கள். பக்கம்02

# முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி யாழ்.பல்கலையில் இடித்தழிப்பு!

## இருட்டியதும் வளாகத்தையே மூடிவிட்டு நிர்வாகம் மேற்கொண்ட தற்குறித்தனம்

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜனவரி 09

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி, பல்கலைக்கழக நிர்வாகத்தினரால் திட்டமிட்டு இரவு வேளை இடித்தழிக்கப்பட்டது.

தமிழ் மக்களின் உணர்வெழுச்சியுடன் சம்பந்தப்பட்ட இந்த நினைவுச் சின்னத்தை, பல்கலைக்கழகத்தை மூடி விட்டு – இருட்டுக்கு மத்தியில் – கபடத்தனமாக இடித்தழித்துத் தற்குறித்தனம் புரிந்திருக்கின்றது யாழ் பல்கலைக்கழக நிர்வாகம். பக்கம் 02









## பல்கலை நினைவுத்தூபி சட்டவிரோதம்; பல்வேறு அழுத்தங்களால் உடைத்தோம்

### துணைவேந்தர் சிறிசற்குணராஜா விளக்கம்




(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக வளாகத்தில் இடிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருந்தது.

அதை அகற்றுமாறு தொடர்ச்சி பக்கம் 02

## பல்கலை முன்றிலில் பதற்றம்! இராணுவம், பொலிஸார் குவிப்பு

யாழ் பல்கலைக்கழக முன்றிலில் இன்று அதிகாலைவரை பெரும் பதற்றம் நிலவியது.

முன்வாசலில் ஒருபுறம் படையினரும் பொலிஸாரும் முரண்டுநிற்க, மறுபக்க வீதியோரத்தில் மாணவர்களும், ஆர்வலர்களும் திரண்டு அமர்ந்திருந்து கோஷமிட்டனர்.

‘துணைவேந்தரே வெளியே வாருங்கள்!’ என்று அவர்கள் கோஷமிட்டு பக்கம் 11

## தமிழினத்தின் ஆன்மாவையே அழித்த மிகக் கொடூரச் செயல்!

### தமிழரசுக் கட்சி கடும் கண்டனம்



யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடித்து அழிக்கப்பட்டமை தமிழினத்தின் ஆன்மாவையே அழித்த மிகக் கொடூரமான செயலாகும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா வெளியிட்டுள்ள கண்டனத்தில் பக்கம் 02

## தமிழர்களின் உணர்வுகளை காயப்படுத்திய முட்டாள்தனம்


### ஸ்ரீகாந்தா காட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 09

“தமிழ் மக்கள் உணர்வுகள் முட்டாள்தனமான முறையில் காயப்படுத்தப்பட்டிருக்கின்றன. இதற்கான முழுப் பொறுப்பையும் யாழ்.பல்கலைக்கழக நிர்வாகம் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும். வெறும் பக்கம் 02

## அரசியல் தீர்வு கிடைக்க இந்தியா துணை நிற்கும்

### சம்பந்தன் முழு நம்பிக்கை



இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்றுத்தரும் நடவடிக்கையில் இந்தியாவை நாம் முழுமையாக நம்பு பக்கம் 02

## மாகாண முறைமையை மாற்றினால் பேராபத்து!

### அரசுக்கு சஜித் எச்சரிக்கை

இலங்கையின் மாகாண சபை முறைமையில் மாற்றம் செய்யாது அதனை தற்போது உள்ளவாறே பேண வேண்டும். இதை மீறி மாகாண சபை முறைமையில் அரசு மாற்றத்தை ஏற்படுத்தினால் பாரிய விளைவுகளை நாடு சந்திக்க வேண்டிவரும்.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். பக்கம் 02

## மேலும் மூவர் மரணம் கொரோனா காவு 225

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் மூவர் உயிரிழந்துள்ளனர்.

கொழும்பு, இரத்தினபுரி பக்கம் 02

## கொரோனாத் தொற்றுக்கு நேற்றும் 524 பேர் இலக்கு!

இலங்கையில் நேற்றும் 524 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். பக்கம் 02

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அது போல ஒரு காரியம் நேற்றிரவு யாழ் பல்கலைக்கழகத்தில் நடந்திருக்கின்றது. இருப்பவரின் சின்னத்தனத்தினால் –அல்லது 'தற்குறிப் போக்கால் – முன்னைய துணைவேந்தர் விக்னேஸ்வரன் ஒரே நாளில் தமிழ் மக்களின் மனதில் கதாநாயகராகி விட்டார். இருப்பவர் நம்பியாரின் வில்லன் நிலைக்கு இறங்கி விட்டார்.

இருப்பவரின் பக்கத்தில் – அவரோடு அணி சேர்ந்திருக்கும் பதிவாளர், உதவிப் பதிவாளர் போன்ற ரத,கஜ,துரக,பதாதிகள் பக்கத்தில் – என்ன காரணங்கள் இருந்தாலும், என்ன நியாயங்கள் இருந்தாலும் – இரவு நேரம் பல்கலைக்கழக வாசல்களை எல்லாம் பூட்டி விட்டு, சத்தம் சந்தடியின்றி நினைவுத் தூபியை உடைத்த கோழைத்தனம், தென்னிலங்கை ஆட்சிப் பீடத்துக்குப் பல்லக்குத் தூக்கும் அவர்களின் ஜலராத்தனத்துக்கு முழு அளவிலான சாட்சியமன்றி வேறில்லை.

பேராசிரியர் கே.கைலாசபதி, பேராசிரியர் சு.வித்தியானந்தன், மாமனிதர் பேராசிரியர் அ.துரைராஜா போன்ற மாமலைகள் இருந்த இடத்தில் இப்படி இரவில் பல்கலைக்கழகத்தைப் பூட்டிவிட்டு, முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை இடிக்குமளவுக்கு சின்னத்தனப் போக்காளர்களும் அமரும் நிலைமை வந்தது யாழ் கல்வித்துறைக்கே சீரழிவு.

யாழ் பல்கலைக்கழகத்தில் நேற்றிரவு நினைவுத் தூபி உடைக்கப்பட்ட இடத்தை ஒட்டி அருகருகே மூன்று நினைவுச் சின்னங்கள் இருந்தன. அவற்றில் ஒன்றே நேற்று தற்போதைய துணைவேந்தர், பதிவாளர் கூட்டு அணியால் சிதறடிக்கப்பட்டிருக்கின்றது.

ஒன்று – மாவீரர் நினைவாலயம். அது 2005 ஆம் ஆண்டளவில் – புலிகளுக்கும் அப்போதைய அரசுக்கும் இடையில் சுமூகமாக நிலைமை காணப்பட்ட காலத்தை ஒட்டிக் கட்டப்பட்டதாக எனக்கு நினைவு. அது அப்போதைய நிர்வாகத்தின் இணக்கத்துடனும் பங்களிப்புடனும் அமைக்கப்பட்டமையால் பல்கலைக்கழகச் சொத்தாகவே கருதப்படுகின்றது என்று நினைக்கிறேன். அதற்கான மின்இணைப்பு, அவ்வப்போது அதனைச் சீரமைத்து பெயின்ட் அடித்மை எல்லாம் பல்கலைக்கழக நிர்வாகத்தினாலேயே. அவை கடந்த பதினைந்து வருடங்களாக முன்னெடுக்கப்படுகின்றன என்று நினைக்கிறேன். மாணவர்களும் அவ்வப்போது சிரமதானம் மூலம் அதனைப் பராமரித்து வருகின்றனர்.

இப்போதைய 'தற்குறி'க் கூட்டம் தென்னிலங்கை அதிகார வர்க்கத்துக்கு வால் பிடிக்கும் தமது விசுவாசத்தின் அதிமே தாவித்தனத்தைக் காட்டுவதற்காக இதையும் கூட நாளை இருண்டதும் பல்கலைக்கழகக் கதவைப் பூட்டி விட்டு இடித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அவ்வளவு தூரம் படித்த மேதாவி முட்டாள்கள் அவர்கள்.

அடுத்தது – 'பொங்குதமிழ்' நினைவுப் பதாகைக் கல். 2001 ஜனவரி 17 இல் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடந்த 'பொங்குதமிழ்' நிகழ்வின் பிரகடனம் அமைந்த படிகம். அந்த இடத்தில் ஆரம்பத்தில் தட்டி போல அந்தப் பிரகடனம் இருந்தது. இப்போது நினைவுப் படிகமாக உள்ளது.

மூன்றாவது – இப்போது இடிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி. யாழ் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட மாணவர்கள், ஊழியர்கள், பல்கலைக்கழக சமூகத்தினர் மற்றும் அவர்களின் உறவுகளுக்காக 2018 மேயில் அமைக்கப்பட்டது. ஆரம்பத்தில் அதனை யாழ் பல்கலைக்கழகத்தின் பரமேஸ்வரன் கோயில் முன்றிலில் அமைக்கவே அப்போதைய மாணவர் அணி முயன்றது. எனினும் சமரச ஏற்பாடாக பாதை சுற்று வளைவுக்கு அண்மையில் தற்போதைய இடத்தில் அது அமைக்கப்பட்டது.

அது கட்டப்பட்ட போதே பல்கலைக்கழக நிர்வாகத்தின் அனுமதியின்றி மாணவர் தரப்பினால் அது நிர்மாணிக்கப்பட்டதால் அதை நிறுத்தும்படி அப்போதைய துணைவேந்தர் விக்னேஸ்வரனுக்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் கடும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அவர் அதனை மாணவர்களுக்குத் தெரியப்படுத்தியமையை அடுத்து அது அமைக்கும் வேலை 2019 பெப்ரவரியில நிறுத்தப்பட்டது. எனினும் 2019 ஏப்ரலில் அதன் பல பகுதிகளை வெளியே தயாரித்து எடுத்து வந்து உள்ளே பொருத்தி, நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டது. அங்கேயே முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் காலத்தில் நினைவு நிகழ்வுகளும் இடம்பெற்று வந்தன.

அந்த நினைவுத் தூபியை அகற்றும் படி போட்ட மேலிட உத்தரவை நிறைவேற்றத் தவறியமையினாலேயே முன்னாள் துணைவேந்தர் விக்னேஸ்வரன் கொழும்பு ஆட்சிப் பீடத்தினால் இடைவழியில் பதவி பறிக்கப்பட்டு ஒதுக்கப்பட்டார்.

இப்போதைய புதிய துணைவேந்தர் பதவியேற்று சில மாதங்களுக்குள்ளேயே அந்த வேலை மிக இரகசியமாகத் திட்டமிட்டு, கனகச்சிதமாக நிறைவேற வழி செய்து, கொழும்பு உத்தரவை சிரமேற் கொண்டு சாதித்துக் காட்டியிருக்கின்றார். அதற்குப் 'பிச்சையாக' கொழும்பின் கடைக்கண் பார்வையும் பரிசும் உரிய நேரத்தில் விரைவில் கிட்டும் என அவர் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாம்.

பல்கலைக்கழக சொத்துக்களின் காவலர் பதிவாளர்தான். நேற்றிரவு பதிவாளர் காண்டீபனும், பராமரிப்பு விடயங்களுக்குப் பொறுப்பான பிரதிப் பதிவாளர் ராஜவிசாகனும், பராமரிப்பு ஊழியர்களைக் கொண்டு, நினைவுத் தூபியை உடைக்கும் வேலையை 'பொறுப்பாக' நிறைவேற்றினர்.

நேற்றிரவு 7 மணிக்கு சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்த நிதிக்கிளை, பரீட்சைக் கிளை ஊழியர்களை தொலைபேசி மூலம் அழைத்த பதிவாளர் உடனடியாகப் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறும்படி பணித்தார். உள்ளேயிருந்த எல்லா ஊழியர்களையும் நேரத்துடன் கலைத்து, பல்கலைக்கழகத்தைச் சூழ பாதுகாவலர்களை நிறுத்தி, பல்கலைக்கழகத்தைப் பூட்டி விட்டு, ஏற்கனவே தயாராக வைத்திருந்த பராமரிப்பு ஊழியர்களைப் பதிவாளரும், பிரதிப்பதிவாளரும் களத்தில் இறக்கினர். தயாராக இருந்த ஜே.ஸி.பி. இயந்திரம் மூலம் நினைவுத் தூபி உடைக்கப்படுவதை இருவருமே நேரில் நின்று கண்காணித்தனர். அச்சமயம் துணைவேந்தர் தமது அலுவலகத்தில் இருந்தார்.

*"தமது மேலிடத்து உத்தரவு", "சொன்னதைச் செய்தோம், இது எமது அரச பணி"* என்று காரணம் கூறும் விளக்க அறிக்கைகள் தற்குறி' அதிகாரிகள் பக்கத்தில் இருந்து வரலாம்.

எது, எப்படியென்றாலும் இரவில் பல்கலைக்கழகத்தைப் பூட்டிவிட்டு, தமிழர்களின் உணர்வெழுச்சியுடன் விளையாடும் அடாவடித்தனத்தைப் பண்ணும்படி மேலிடத்து உத்தரவு வந்திருக்காது என்பது நிச்சயம். இந்தத் திட்டம் எல்லாம் நம் உள்ளூர் தற்குறிகளின் குரங்குத்தனமின்றி வேறில்லை.

இதனை சீருடைத் தரப்பு செய்யவில்லை, எங்கள் பெயரில் 'டை' கட்டியிருக்கும் படித்த மேதாவிகளே சில்லறைத்தனமாகச் செய்தார்கள் என்பதே மனதை நெருடி நோகடிக்கும் செயலாக உள்ளது.

– மின்னல் –

## பல்கலை நினைவுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யான பல்வேறு அழுத்தங்கள் எம் மீது பிரயோகிக்கப்பட்டு வந்தன. அதற்கமைய அந்த நினைவுத்தூபியை இடிப்பதற்கான தீர்மானத்தை யாழ்.பல்கலைக்கழக நிர்வாகம் மேற்கொண்டது.

– இவ்வாறு யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் எஸ்.சிறிசற்குணராஜா நேற்றிரவு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பாதுகாப்புத் தரப்பு உட்பட்ட பல்வேறு தரப்புக்களால் தொடர்ந்தும் முன்வைக்கப்பட்ட அழுத்தம் காரணமாகவே இந்த முடிவுக்குச் செல்ல நேர்ந்தது.

பல்கலைக்கழக நிர்வாகம் இவ்வாறான ஒரு முடிவை எடுக்காவிட்டிருந்தால் வேறு தரப்புக்கள் உள்நுழைந்து அந்த நினைவுத்தூபியை அகற்றியிருக்கக்கூடும் என்பதாலும், அவ்வாறு நடைபெறுவது பல்கலைக்கழகத்துக்கு அழகல்ல என்பதாலுமே நாம் இவ்வாறான ஒரு நடவடிக்கையை முன்னெடுத்தோம் – என்றார்.

## அரசியல் தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கின்றோம். தமிழர்களுக்கான தீர்வு விடயம் தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்த கருத்துக்களும், இன்று எம்முடன் அவர் பேசிய விடயங்களும் ஒன்றாகவே உள்ளன. இதனை நாம் வரவேற்கின்றோம். இந்தக் கருத்துக்கள் எமக்கு நம்பிக்கை மிகுந்தவையாக உள்ளன.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டிருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கும் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையில் கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் நேற்றுமுன்தினம் சந்திப்பு இடம்பெற்றது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

பிறந்துள்ள புதுவருடத்தில் மிகவும் முக்கியம் வாய்ந்த சந்திப்பாக இது இருந்தது. இது எமக்கு மிகவும் நம்பிக்கை மிகுந்த – திருப்திமிக்க சந்திப்பாகவும் உள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், இலங்கை விவகாரங்களில் பல வருடங்கள் அனுபவம் வாய்ந்தவர். இங்குள்ள நிலைமைகளை ஆழமாக அறிந்தவர்.

மாகாண சபை முறைமைகள், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசின் புதிய அரசமைப்பு வரைவு மற்றும் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் அவருடன் கலந்துரையாடினோம்.

அவர் எமக்கு அளித்த பதில்கள் நம்பிக்கை மிகுந்தவையாக உள்ளன. புதிய அரசமைப்பு மற்றும் அரசியல் தீர்வு விடயங்களில் நாம் கொண்டுள்ள நிலைப்பாட்டை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் அவர் நேரில் எடுத்துரைப்பார். இது தொடர்பில் அவர் எமக்கு வாக்குறுதியும் தந்துள்ளார்.

தீர்வு விடயம் மற்றும் தமிழர் விவகாரம் தொடர்பில் இந்தியாவுடனான எமது பேச்சுகள் தொடரும் – என்றார்.

## மாகாண முறைமையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாங்கள் 13 ஆவது திருத்தத்துக்கு முழுமையான ஆதரவை வழங்குகின்றோம். அது நாட்டின் இறைமைக்குப் பாதிப்பை ஏற்படுத்தாது என்று உயர்நீதிமன்றமே கூறியுள்ளது.

இதனால் மாகாண சபை முறைமையில் மாற்றம் செய்யக் கூடாது. அது தற்போது உள்ளவாறே பேணப்பட வேண்டும் என்பதே எமது கட்சியினரின் நிலைப்பாடாக உள்ளது.

இதன்படி மாகாண சபை முறைமை பலப்படுத்தப்பட வேண்டுமே ஒழிய, அதனைப் பலவீனப்படுத்த எவருக்கும் இடமளிக்கக்கூடாது.

இதையும் மீறி மாகாண சபை முறைமையில் அரசு மாற்றத்தை ஏற்படுத்தினால் பாரிய விளைவுகளை நாடு சந்திக்க வேண்டிவரும் – என்றார்.

## முள்ளிவாய்க்கால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

'அனுமதி அற்ற கட்டமைப்பு' என்ற பெயரில் அது இடிக்கப்பட்டது என துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராசா இப்போது விளக்கம் கூறினாலும், மாணவர்களினதும், பொதுமக்களினதும், அரசியல் தலைவர்களினதும் கண்களில்படாமல், அதனை இடித்தழிக்கும் வேலை மிகவும் நுட்பமாகத் திட்டமிடப்பட்டு நிறைவேற்றப்பட்டதிலிருந்து இதன் பின்னணி அம்பலமாகியுள்ளது.

மேற்படி தூபி இடிக்கப்பட்டமை பற்றிய செய்தி தமிழர் தேசம் எங்கும் காட்டுத்தீ போல பரவியது. பல இடங்களில் இருந்தும் மாணவர்களும், ஆர்வலர்களும் இரவு வேளையில் யாழ் பல்கலைக்கழகத்துக்கு முன்னாள் நூற்றுக்கணக்கில் கூடினர்.

யாழப்பாணத்துக்கு வெளியிலும் புலம்பெயர் தேசம் எங்கும் தமிழ் உணர்வெழுச்சியாளர்களை உசுப்பி விட்டிருக்கும் இச்சம்பவத்தை அடுத்து, மக்கள் மத்தியில் யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர், பதிவாளர் உட்பட்ட நிர்வாகத்தினருக்கு எதிராகக் கடும் சீற்றம் கிளர்ந்துள்ளமையையும் உணர முடிந்தது.

நினைவுத் தூபி இடித்தழிக்கப்பட்ட செய்தி பரவி, யாழ் பல்கலைக்கழக முன்றிலில் மாணவர்கள் உட்படப் பல நூற்றுக்கணக்கானோர் திரண்டமையை அடுத்து, பல்கலைக்கழக நிர்வாகத்தினால், பல்கலைக்கழகப் பிரதேசத்தில் பொலிஸாரும், இராணுவத்தினரும் பெரும் எண்ணிக்கையில் களம் இறக்கப்பட்டனர். இராணுவம், விசேட அதிரடிப்படை, மோட்டார் சைக்கிள் படையணி என்று அனைவரும் பல்கலைக்கழகத்தைச் சூழ்ந்தனர்.

பொலிஸார் பல சந்தர்ப்பங்களில் மாணவர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுடன் முரண்பட்டனர்.

## மேலும் மூவர் மரணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஆண்கள் இருவரும், ஹொரானை பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 225 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 212 பேர் கொரோனாவின் மூன்றாவது அலையில் சாவடைந்துள்ளனர். கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவு உயிரிழப்புகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனாத் தொற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்படி நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 47 ஆயிரத்து 305 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 43 ஆயிரத்து 554 பேருக்கு கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் வைரஸ் தொற்றியுள்ளது.

மொத்தத் தொற்றாளர்களில் 40 ஆயிரத்து 317 பேர் குணமடைந்துள்ளனர் எனவும், 6 ஆயிரத்து 763 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தமிழர்களின் உணர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கண்டனத்துடன் மாத்திரம் நாங்கள் நின்றுவிடப்போவதில்லை. முழு உண்மையும் வெளியே கொண்டு வரப்படும்"

– இவ்வாறு தமிழ்த்தேசியக் கட்சியின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா நேற்றிரவு தெரிவித்தார்.

யாழ் பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி அழிக்கப்பட்டமை தொடர்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## தமிழினத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி அரசின் மேலிடத்தின் உத்தரவின் பிரகாரம் பல்கலைக்கழக நிர்வாகத்தால் நேற்றிரவு இடித்தழிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரும் இராணுவத்தினரும் பெரும் எண்ணிக்கையில் பல்கலைக்கழக வாயிலில் குவிக்கப்பட்டுப் பாதுகாப்பு வழங்க இந்த அருவருக்கத்தக்க – ஈனத்தமான – செயல் அரங்கேறியுள்ளது.

தமிழினப் படுகொலையின் அடையாளமாக முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி விளங்குகின்றது.இது இடித்து அழிக்கப்பட்டமை தமிழினத்தின் ஆன்மாவையே அழித்த மிகக் கொடூரமான செயலாகும்.

இந்த அராஜகத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றன – என்றார்.

# வடக்கு - கிழக்குக்குக் காணி அதிகாரம் வழங்குவதற்கு அரசு தயாராக உள்ளதா?

## மரிக்கார் எம்.பி. கேள்வி

இலங்கையிலுள்ள தமிழ் மக்களுக்கான சமவுரிமையை நிலைநாட்ட வேண்டும் என்று கூறுவதன் மூலம் 13 ஆவது அரசமைப்பு திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளமை தெளிவாகிறது.

13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தினால் வடக்கு , கிழக்கிற்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களும் வழங்கப்பட வேண்டும். ஜெய்சங்கரின் கருத்துக்களுக்கு அரசாங்கம் மௌனம் சாதிப்பதிலிருந்து இதற்கு தயாராகவுள்ளது என்பது தெளிவாகிறது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

அரசாங்கம் கொவிட் தடுப்பூசி பற்றி பேசிக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சரின் இலங்கை விஜயம் அமைந்துள்ளது. அவர் இந்த வருடத்தில் தனது முதலாவது இராஜதந்திர விஜயத்திற்கு இலங்கையை தேர்ந்தெடுத்துள்ளமையை சாதாரண விடயமாகக் கருத முடியாது.



இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதாரம் உள்ளிட்ட விடயங்களை இந்தியா காலம் காலமாக உன்னிப்பாக அவதானித்து வருகிறது. இவ்வாறான நிலையிலேயே கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பிலும் பரவலாகப் பேசப்படுகிறது. ஏன் இதனை இந்தியாவிற்கு விற்பதில் அரசாங்கம் இவ்வளவு ஆர்வம் செலுத்துகிறது?

இந்திய வெளிவிவகார அமைச்சர் தமிழ் மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தியுள்ளார். அதாவது 13 ஆவது அரசமைப்பு திருத்தத்தை அவ்வாறே நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதை இதன் மூலம் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார். அவர் இதனைக் கூறும் போது அரசாங்கம் மௌனம் சாதித்ததன் மூலம் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கத் தயாராக உள்ளனர் என்று தோன்றுகிறது.

விமல் வீரவன்சவிற்கும் உதய கம்மன்பிலவிற்கும் இப்போது சந்தோஷமா எனக் கேட்க விரும்புகின்றேன்.

இந்தியாவில் இரு தேசிய கொவிட் தடுப்பூசிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

இதனை பெற்றுக் கொள்வதற்கு அரசாங்கம் தயாராகின்றதா? இலங்கைக்கு எவ்வகையான தடுப்பூசி கொள்வனவு செய்யப்படவுள்ளது? எந்த முகவர் ஊடாக கொண்டு வரப்படவுள்ளது? – என்பவற்றை அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும்.

சிங்கள பௌத்தர்களை பாதுகாப்பதாகக் கூறிய அரசாங்கத்தில் பௌத்த மதத் தலைவர்கள் நால்வர் கொல்லப்பட்டுள்ளனர். இதற்கு அரசாங்கம் பௌத்த மக்களுக்கு பொறுப்புக் கூற வேண்டும்.

உதயங்க வீரதுங்க உக்ரைனிலிருந்து சுற்றுலாப்பயணிகளை அழைத்து வருகிறார். அந்த நாடு இலங்கையை விட வறுமையானதாகும். அத்தோடு அங்கு புதிய வைரஸ் வகைகள் 4 பரவுகின்றன எனக் கூறப்படுகிறது.

இவ்வாறான நாட்டிலிருந்து சுற்றுலா பயணிகள் அழைத்து வரப்பட்டுள்ளமையால் உள்நாட்டு சுற்றுலாத்துறை ஊழியர்கள்தான் பாதிக்கப்பட்டுள்ளனர். சுகாதாரப் பாதுகாப்பு விதிமுறைகள் எதனையும் பின்பற்றாமல் இவர்கள் அழைத்து வரப்பட்டுள்ளார்கள்.

ஏன் உக்ரைனிலிருந்து மாத்திரம் அழைத்து வரப்படுகிறார்கள்? இவர்களை விட அதிகளவில் செலவுகளை மேற்கொள்ளக் கூடிய நாட்டவர்களை ஏன் அழைத்து வர முடியாது?. – என்றார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

35 வது பொதுப் பட்டமளிப்பு வைபவம் – 2021

பேராசிரியர் கந்தையா குணரத்தினம் தங்கப்பதக்கம்

பேராசிரியர் கந்தையா குணரத்தினம் தங்கப்பதக்கத்தினை வழங்கும் பொருட்டு கல்வியாண்டு 2016/2017, மற்றும் 2017/2018 இல் பட்டம் பெற்ற விவசாய, பிரயோக விஞ்ஞான, பொறியியல் மற்றும் விஞ்ஞான பீடங்களைச் சேர்ந்த தூய, பிரயோக விஞ்ஞானப்பட்டதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமை:-** எதிர்வரும் 35வது பொதுப் பட்டமளிப்பு வைபவத்தில் பட்டம் பெறவிருக்கும் விஞ்ஞானம், விவசாயம் மற்றும் பிரயோக விஞ்ஞானத்தில் நான்கு வருட இளமாணிப்பட்டம் அளிக்கப்படவிருக்கும், முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு மேற்பிரிவில் சித்தியடைந்தவர்கள் தங்கப்பதக்கத்திற்கு தகுதியுடையவராகக் கருதப்படுவர்.

**விண்ணப்பப்படிவங்களை கீழ்க்காணும் ஒரு முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.**

1. உதவிப் பதிவாளர், கல்வி விவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
2. பிரதிப் பதிவாளர், பரீட்சைகள் மற்றும் மாணவர் சேவைகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகம், வவுனியா.
3. இணையத்தளம் http://www.jfn.ac.lk

**முடிவுத் திகதி:-** 27.01.2021 (புதன்கிழமை)

**முக்கிய குறிப்பு:-** சரியான, பொருத்தமான தகவல்களை உள்ளடக்காதவையும், தெளிவற்றவையும், பூரணப்படுத்தப்படாதவையும் மற்றும் முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுபவையுமான விண்ணப்பங்கள் யாவும் கருத்திற் கொள்ளப்படமாட்டா.

**பதிவாளர்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

35 வது பொதுப் பட்டமளிப்பு வைபவம் – 2021

பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப்பதக்கம்

பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப்பதக்கத்தினை வழங்கும் பொருட்டு கல்வியாண்டு 2016/2017, மற்றும் 2017/2018 இல், பட்டம் பெற்று முதலாம் வகுப்பில் அல்லது இரண்டாம் வகுப்பு மேற்பிரிவில் சித்தியெய்தி, எதிர்வரும் 35வது பொதுப் பட்டமளிப்பு வைபவத்தில் இளமாணிப் பட்டம் அளிக்கப்படவிருக்கும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்பப்படிவங்களை கீழ்க்காணும் ஒரு முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.**

1. உதவிப் பதிவாளர், கல்வி விவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
2. பிரதிப் பதிவாளர், பரீட்சைகள் மற்றும் மாணவர் சேவைகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகம், வவுனியா.
3. இணையத்தளம் http://www.jfn.ac.lk

**விருதுகள்:-** பல்கலைக்கழக மட்டத்தில் சகலதுறைகளிலும் சிறப்பாக செயற்பட்டமைக்காக ஒரு பதக்கம். பீட மட்டத்தில் சகல துறைகளிலும் சிறப்பாகச் செயற்பட்டமைக்காக ஒவ்வொரு பீடத்திற்கு ஒவ்வொரு பதக்கம்.

**முடிவுத் திகதி:-** 27.01.2021 (புதன்கிழமை)

**முக்கிய குறிப்பு:-** சரியான, பொருத்தமான தகவல்களை உள்ளடக்காதவையும், தெளிவற்றவையும், பூரணப்படுத்தப்படாதவையும் மற்றும் முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுபவையுமான விண்ணப்பங்கள் யாவும் கருத்திற் கொள்ளப்படமாட்டா.

**பதிவாளர்**

# 135 மில்லியன் ரூபா பெறுமதியிலான எக்ஸ்டஸி போதை மாத்திரைகள் மீட்பு!

பெல்ஜியத்திலிருந்து கொழும்பு மத்திய அஞ்சல் பரிமாற்ற நிலையத்துக்கு விமான அஞ்சல் மூலமாக அனுப்பப்பட்ட ஒரு தொகை எக்ஸ்டஸி போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன என சுங்கப் பிரிவின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

ஒன்பது கிலோ கிராம் எடையுள்ள 18 ஆயிரத்துக்கும் அதிகமான எக்ஸ்டஸி போதை மாத்திரைகளையே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன.

இவற்றின் பெறுமதியானது 135 மில்லியன் ரூபா என தெரிவித்துள்ள சுங்கப் பிரிவு அதிகாரிகள் இலங்கை வரலாற்றில் அதிகளவான எக்ஸ்ஸி மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளமை இது முதல் சந்தர்ப்பமாகும் என்றும் கூறியுள்ளனர்.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கொழும்பு -05 பகுதியில் வசிப்பவரின் முகவரிக்கு பூனைகளுக்கான உணவு எனும் பொதியினுள் சூட்சுமமான முறையில் ஏயர் மெயில் வழியாக கொழும்பு மத்திய அஞ்சல் பரிமாற்ற நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

பொதிகள் குறித்து சந்தேகம் அடைந்த சுங்க போதைப்பொருள் பிரிவு அதிகாரிகள் முகவரி தொடர்பில் விசாரித்தமையோடு, முகவரி மோசடி என்று தகவல் வெளிவந்ததையடுத்து பொதிகளைப் பறிமுதல் செய்துள்ளனர்.

இதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட



சோதனை நடவடிக்கையிலேயே இந்தளவான எக்ஸ்டஸி போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன. ஆசிய நாட்டில் இவ்வளவு பெரிய எக்ஸ்டஸி மாத்திரைகள் பறிமுதல் செய்யப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

இதேபோல், கொழும்பு மத்திய அஞ்சல் பரிமாற்ற நிலையத்துக்கு ஏயர் மெயில் மூலம் அனுப்பப்பட்ட 08 பொதிகளை பின்னர் சந்தேகத்திற்கின் அடிப்படையில் சுங்கத்தால் பறிமுதல் செய்யப்பட்டன. அந்த பொதிகளில் 16 கிலோ கிராம் எடையுள்ள காத் புகையிலையை சுங்க அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட போதைப் பொருள்கள் அனைத்தும் மேலதிக விசாரணைகளுக்காக சுங்க போதைப்பொருள் பிரிவால் பொலி போதைப்பொருள் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

# விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்குத் தொற்று

கொழும்பு, ஜன.09

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்காக கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவிற்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா நேற்றுமுன்தினம் (வியாழக்கிழமை) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படாத நிலையில், அவர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார் என சி.ஐ.டியினர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

ஹிஜாஸ் ஹில்புல்லா கடந்த வருடம் ஈஸ்டர் தாக்குதலை மேற்கொண்ட நபருடன் தொலைபேசியில் உரையாடினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஜெய்சங்கர் வெளியிட்ட கருத்து தமிழர்களின் நிலைப்பாடாகுமா?

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் கொழும்பு வந்து திரும்பி விட்டார்.

எனினும் அவர் இங்கு எழுப்பி விட்டுச் சென்றிருக்கும் அரசியல் அதிர்வலைகள் இன்னும் சில காலத்துக்குத் தொடர்ந்து ஒலிக்கும் என எதிர்பார்க்கலாம்.

அதன் விளைவுகள் தென்னிலங்கையில் மாத்திரம் அல்ல, வடக்கு – கிழக்குத் தமிழர்களின் அரசியலிலும் காத்திரமான அதிர்வுகளை ஏற்படுத்தாமல் அடங்க மாட்டாது என்றே தோன்றுகின்றது. அடுத்து வரும் நாள்களில் அல்லது வாரங்களில் அதன் வீச்சை நாம் காணக்கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்க முடியும்.

ஏதோ இலங்கைத் தமிழர்களை இந்தியா முழுமையாகக் கை விட்டு விட்டது என்று நிலைப்பாடு நிலவிய சூழலில், கொழும்பு வந்து, இல்லை நாம் இலங்கைத் தமிழரின்பால் இன்னும் பரிவு கொண்டிருக்கின்றோம் என்ற சாரப்பட தலைநர் கொழும்பில் நின்றே வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் கோடி காட்டிச் சென்றிருக்கின்றார் என்பது வாஸ்தவம்தான்.

அந்த வகையில் இந்திய வெளியுறவு அமைச்சரின் கருத்துப் பிரதிபலிப்பு தமிழர் தரப்பில் திருப்தியையும் சிலாகிக்கத் தக்க நிலைப்பாட்டையும் சில மட்டங்களில் ஏற்படுத்தினாலும், அது புதிய பல அதிர்வுகளுக்கான வத்தியையும் வைத்திருப்பது இப்போது மெல்லப் புலப்பட்டத் தொடங்கியுள்ளது.

வீரியத்துடனும், பலத்துடனும் விஸ்வரூபம் எடுத்துள்ள சிங்கள, பௌத்த ஆட்சிப்பீடம் இனித் தமிழர்களுக்கு மாகாண சபையும் இல்லை, அதிகாரப் பகிர்வும் இல்லை என்ற அளவுக்கு, இப்பிரச்சினையை உதாசீனம் செய்து, உறுதியுடன் கிளர்ந்த நிலையில்தான் இந்திய வெளியுறவு அமைச்சரின் கொழும்பு வருகையின்போது இலங்கை இனப்பிரச்சினை குறித்து அவரால் கருத்து வெளியிடப்பட்டது. அவரது கொழும்பு அறிவிப்பில் இனப்பிரச்சினை தொடர்பில் பின்வரும் அம்சங்களே வலியுறுத்தப்பட்டிருந்தன: –

★ ஐக்கிய இலங்கைக்குள் தமிழர்களின் அபிலாஷைகளான சமத்துவம், நீதி, சமாதானம், கௌரவம் ஆகியவற்றை நிறைவு செய்யும் தீர்வு அவர்களுக்கு கிட்டவேண்டும்.

★ அரசமைப்பின் 13ஆவது திருத்தம் உள்ளடங்கலாக அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுக்காக இலங்கை வழங்கிய பிற உறுதிப்பாடுகளும் நிறைவு செய்யப்பட வேண்டும்.

– இதுதான் இந்திய நிலைப்பாடாக ஜெயசங்கர் வெளியிட்ட கருத்தின் சாரமாகும்.

இதனைக் கொஞ்சம் விளக்கி, விரிவுபடுத்தி, அர்த்தப்படுத்தினால், 13ஆம் திருத்தத்தின் முழு நடைமுறையாக்கமும், மேலதிகமாக '13 பிளஸ்' என்பதுமே ஜெய்சங்கர் வற்புறுத்திய விடயமாகும்.

ஒன்றுமே இல்லை என்ற அநாதரவு நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் தமிழினம் இந்திய வெளியுறவு அமைச்சரின் இந்த நிலைப்பாட்டையாவது 'கப்' என்று பிடித்துக் கொண்டு அதனை தனது பொது நிலைப்படாக வலியுறுத்த வேண்டும் என்று சில தரப்புகளினால் ஆலோசனைகளும் – கொஞ்சம் அதையும் தாண்டி வற்புறுத்தல்களும் – முன்வைக்கப்படுகின்றன.

நாடாளுமன்றத்தில் இருக்கும் எல்லாத் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளும் (அரசுத் தரப்பில் இருப்பவர்கள் உட்பட) அனைத்துத் தமிழ் எம்.பிக்களும் இந்தியாவின் இந்த நிலைப்பாட்டை அப்படியே பற்றிக் கொண்டு, அதனை நிறைவேற்றுமாறு ஒற்றுமைப்பட்டு, ஐக்கியமாகக் கொழும்பையும் இந்தியாவும் கோர வேண்டும் என்ற வலியுறுத்தல் சில வட்டாரங்களில் இருந்து தமிழர் தலைவர்கள் மீது பிரயோகிக்கப்படுகின்றது.

மேற்படி நிலைப்பாட்டை இந்திய வெளியுறவு அமைச்சர் கொழும்பில் வெளியிட்டு ஒரு சில மணிநேரத்துக்குள்ளேயே அந்த நிலைப்பாட்டை கூட்டமைப்பு வரவேற்கின்றது என்ற சாரப்பட நாடாளுமன்றத்தில் அறிவித்தார் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன். அதனை கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் இதுவரை மறுத்துரைக்காத வரை, இந்திய வெளியுறவு அமைச்சரின் கருத்து நிலைப்பாட்டை அவையும் ஏற்றுள்ளன என்று கொள்ள முடியும்.

என்னதான், தமிழர்களின் நீதி, நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்ய வேண்டும் என்று இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் கூறினாலும், அதற்கு அவர் கோடிகாட்டிய எல்லை, 13ஆவது திருத்தமும், 13 பிளஸும்தான்.

புதிய அரசமைப்புக்கான தனது யோசனையாக ஐக்கிய இலங்கைக்குள் பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற அளவுக்கு வலியுறுத்தியுள்ளது கூட்டமைப்பு.

கூட்டமைப்பினர் இது விடயத்தில் எட்டடி பாய்ந்தால், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தரப்பினரும், நீதியரசர் விக்னேஸ்வரன் தரப்பினரும் அதற்குப் போட்டியாக பதினாறு அடி பாய நிற்பார்கள். அவர்கள் இரண்டு தேசம், சுயநிர்ணய உரிமை என்ற அடிப்படையில் அவற்றையும் வற்புறுத்துவர் என்பது எதிர்பார்க்கத்தக்கதே.

இத்தகைய பின்புலத்தில் இந்திய வெளியுறவு அமைச்சர் வெளியிட்ட கருத்துகளை வழிமொழிந்து அதன் அடிப்படையிலாவது கொழும்பு அரசு தீர்வை முன்வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ் எம்.பிக்கள் ஒன்றுபட்டு முன்வைப்பதற்கான சாத்தியங்கள் மிக மிகக் குறைவு என்றே தோன்றுகின்றது.

முடக்கப்பட்ட மட்டக்களப்பு

## காத்தான்குடி எல்லைக்குள் இராணுவத்தினர் பாதுகாப்பு



### அரசாங்க அதிபர் அறிவிப்பு

மட்டக்களப்பு, ஜன.09

தனிமைப்படுத்தப்பட்டு, முடக்கப்பட்ட மட்டக்களப்பு காத்தான்குடி பிரதேச செயலகப் பிரிவில் தனிமைப்படுத்தப்பட்ட சட்டத்தை மீறி வீடுகளை விட்டு வெளியேறி, வீதிகளில் நடமாடுபவர்கள் மற்றும் வர்த்தக நிலையங்களை திறப்போருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அந்த மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை காத்தான்குடி பிரதேச எல்லைக்குள் இராணுவ பாதுகாப்பு நடைமுறைப் படுத்தப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக கணபதிப்பிள்ளை கருணாகரன் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

கொரோனா தொற்றின் அச்சுறுத்தல் காரணமாக பொது மக்களின் சுகாதார நலன் கருதி கடந்த ஒரு வார காலமாக பூரண முடக்கம் பிரகடனப்படுத்தப்பட்டு இருக்கின்றது.

இந்த நிலையில் கடந்த நாள்களாக எமது பிரதேசத்தில் எடுக்கப்படுகின்ற ரபிட் அன்டிஜன் பரிசோதனையின்படி தொடர்ச்சியாக தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றமை மிகப் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. இது சுகாதார நடைமுறைகளைப் பேண வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றது.

எனவேதான் இவ்வாறான தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்புக்கு தொடர்ச்சியாக காத்தான்குடி பிரதேச எல்லைக்குள் முடக்க நிலையை முறையாக பின்பற்றப் படாமையை எல்லோராலும் கவனத்துக்கும் கொண்டு வரப்பட்டதுடன், இது தொடர்பாக மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டது. இறுக்கமான நடைமுறைகளை பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை மாவட்ட கொரோனா தடுப்பு செயலணியினர் எடுத்துள்ளனர்.

இதன்படி இராணுவப் பாதுகாப்பு நடைமுறைகள் காத்தான்குடி பிரதேச எல்லைக்குள் நடைமுறைப்படுத்தப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அனுமதியின்றி வீதியில் நடமாடுகின்றவர்கள், வீட்டுக்கு வெளியே வருகின்றவர்கள் சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு பொலிஸாருக்கு இறுக்கமான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கின்றது.

அதேவேளை அனுமதியின்றி வெளியில் வாகனங்களில் நடமாடுகின்றவர்களது வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டு, அரசுடமை ஆக்கப்படும். அனுமதியின்றி கடைகளைத் திறந்து வியாபாரம் செய்கின்றவர்களுக்கெதிராக உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கிழக்கில் கொரோனா உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரித்துள்ளது!

அம்பாறை, ஜன.09

அம்பாறையில் கொரோனா தொற்றால் ஒருவர் உயிரிழந்துள்ளார். இதனடிப்படையில் கிழக்கில் தொற்றால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 9 ஆக அதிகரித்துள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் அழகையா லதாகரன் தெரிவித்துள்ளார்.

அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவில் கொரோனா தொற்றால் 46 வயதுடைய ஒருவர் நேற்று (வியாழக்கிழமை) உயிரிழந்துள்ளார் என வைத்தியர் அழகையா லதாகரன் தெரிவித்துள்ளார்.

அம்பாறை உகன பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த நபர், கொரோனா தொற்று காரணமாக சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளமையுடன் கிழக்கில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 9 ஆக அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 1,500 ஐக் கடந்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் 25 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இரு பொலிஸார் உட்பட 25 பேருக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் தொற்று!

### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனையில் இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட 25 பேருக்கு கொரோனாத் தொற்று கடந்த வியாழக்கிழமை கண்டறியப்பட்டதையடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 334 ஆக அதிகரித்துள்ளதாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மயூரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து மேற்கொண்டுவரும் எழுந்தமானமாக பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளில் ஏறாவூர் சுகாதார பிரிவில் இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட 3 பேருக்கும், காத்தான்குடி சுகாதார பிரிவில் 20 பேருக்கும், வெல்லாவெளி சுகாதார பிரிவில் ஒருவருக்கும், மட்டக்களப்பு சுகாதார பிரிவில் ஒருவருக்கும் என 25 பேருக்குத் தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 334 ஆக அதிகரித்துள்ளதுடன் காத்தான்குடியில் 146 ஆக அதிகரித்துள்ளது. எனவே, பொதுமக்கள் தொடர்ந்தும் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள சுகாதார முறைகளைப் பேணி செயற்படுமாறு அவர் தெரிவித்தார்.

## குளங்களின் வான்கதவு திறக்கப்பட்டமையால் மட்டக்களப்பில் விவசாய நிலங்கள் பாதிப்பு!

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்த மழை மற்றும் கடும் வெள்ளம் காரணமாக உன்னிச்சைகுளத்தின் நீர்மட்டம் உயர்ந்த நிலையில் காணப்படுகின்றது.

மேலும் உன்னிச்சைகுளத்தின் நீர்மட்டம் 31அடியாக காணப்படுவதன் காரணமாக குளத்தின் மூன்று வான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன. இதன்காரணமாக வவுணதீவு பகுதியில் பெருமளவான வயல் நிலங்கள் வெள்ள நீரால் அடித்துச்செல்லப்பட்டுள்ளன.

அதாவது, நூற்றுக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்கள் வெள்ள நீரில் மூழ்கிய நிலையில் காணப்படுகின்றமையை அவதானிக்க முடிவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது வயல்கள் அறுவடைசெய்யும் காலமாகவுள்ள நிலையில் இவ்வாறு வெள்ள நீரில் அடித்துச்செல்லப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

# ஒரு லட்சத்து 30 ஆயிரம் பேர் நாட்டில் சுயதனிமைப்படுத்தலில்!

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தகவல்



நாடளாவிய ரீதியில் சுமார் ஒரு லட்சத்து 30 ஆயிரம்பேர்சுயதனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர். இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ள நபர்கள் மற்றும் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் வசிப்பவர்களை தொடர்ந்தும் வீடுகளிலேயே இருக்குமாறும், தேவையின்றி வீட்டை விட்டு வெளியேறுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண கேட்டுக் கொண்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

கொழும்பில் தெமட்டகொட , மாளிகாவத்த மற்றும் கிராண்ட்பாஸ் ஆகிய பொலிஸ் பிரிவுகளும் , காத்தான்குடி பொலிஸ் பிரிவும் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப் பட்டுள்ளன.

நாடளாவிய ரீதியில் சில கிராம சேவகர் பிரிவுகளும், வீதி ஒழுங்கைகளும் , தொடர்மாடி குடியிருப்புகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு நாடளாவிய ரீதியில் ஒரு லட்சத்து 30 ஆயிரம் பேர் தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கொழும்பில் சில பொலிஸ் பிரிவுகள் தற்போது தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளன. அந்த பகுதிகளில் வசிப்பவர்கள் பயணக்கட்டுப்பாட்டை கடைப்பிடித்தமையுடன், உரிய சுகாதார விதிமுறைகளையும் பின்பற்றியதன் காரணமாகவே அவை விடுவிக்கப்பட்டுள்ளன.– என்றார்.

# அரச உளவுச் சேவைக்கு ஆட்சேர்ப்பு எழுத்துமூல பரீட்சை திகதி அறிவிப்பு

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின், அரச உளவுச் சேவையில் கடமையாற்றுவதற்கான பயிற்சி நிலை பொலிஸ் கான்ஸ்டபிள்கள், பெண் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் பதவிக்கு நேர்முகத் தேர்வில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான எழுத்து மூல பரீட்சை இம் மாதம் 23 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

அன்றைய தினம் காலை 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரை இந்த பரீட்சைகள் 6 பரீட்சை நிலையங்களில் இடம்பெறும் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

கொழும்பு – 1 ஹமீத் அல் ஹுசைனி மகா வித்தியாலயம், கொட்டாஞ்சேனை விவேகானந்தா மகா வித்தியாலயம், கண்டி புஷ்பதான மகளிர் வித்தியாலயம், அனுராதபுரம் வலிசிங்க ஹரிச்சந்ர மகா வித்தியாலயம், காலி விதியாலோக்க வித்தியாலயம், அம்பாறை டி.எஸ். சேனநாயக்க வித்தியாலயம் ஆகிய பரீட்சை நிலையங்களிலேயே இந்தப் பரீட்சை இடம் பெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றத் தகுதிபெற்றுள்ள அனைவருக்கும் பரீட்சை அனுமதி பத்திரம் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட பொலிஸ் தலைமையகம், பரீட்சைக்கு முன்னர் அவ்வனுமதிப் பத்திரம் கிடைக்கப் பெறாத தகுதிபெற்ற பரீட்சாத்திகள் 011 – 2334601 , 011 – 2430362 ஆகிய இலக்கங்களுக்கு அழைப்பை ஏற்படுத்தி அந்தப் பத்திரத்தைத் தொலை நகலில் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவித்துள்ளது

# பிள்ளைகள், குடும்பம், நாட்டுநலன் கருதி சீட்டிழுப்பு தொகையை பயன்படுத்துங்கள்!

## பிரதமர் மஹிந்த அறிவுரை



சில கோடீஸ்வர சீட்டிழுப்பு வெற்றியாளர்களின் மோசமான நிதி மேலாண்மை காரணமாக ஏற்கனவே இருந்த நிலையை விட கீழ் நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். ஆகையால் வெற்றிப் பணப் பரிசை பிள்ளைகள், குடும்பம் மற்றும் இறுதியாக நாட்டின் நலனுக்காக ஈடுபடுத்துமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அபிவிருத்தி லொத்தர் சபையின் கோடிபதி கப்றுக மற்றும் ஜயோதா சீட்டிழுப்புகளின் மூலம் உருவான சுபிரி கோடிபதி வெற்றியாளர்கள் இருவருக்கான காசோலைகளை கையளிக்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை அலரி மாளிகையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வின் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

652 ஆவது கோடிபதி கப்றுக சீட்டிழுப்பின் வெற்றி பரிசுத் தொகையான 8 கோடி 79 லட்சத்து 91 ஆயிரத்து 625 ரூபாவை வெற்றி கொண்ட அம்பன்பொல குமார பதிரன்னேஹேலாகே சுனில் மற்றும் 1717 ஆவது ஜயோதா சீட்டிழுப்பின் வெற்றிப் பரிசுத் தொகையான 5 கோடி 71லட்சது 38 ஆயிரத்து 276 ரூபாவை வெற்றி பெற்ற கல்கமுவ ஏ.ஜி.பி.ஜி.கொடிதுவக்கு ஆகியோருக்கான காசோலைகள் இவ்வாறு பிரதமரால் வழங்கிவைக்கப்பட்டன.

அம்பன்பொல விற்பனை முகவர் யூ.டி.எல்.தினேஷ் குமார மற்றும் கல்கமுவ விற்பனை முகவர் டி.எம்.எஸ்.பி. மெணிக்கே ஆகியோர் இதனை விற்பனை செய்த விற்பனையாளர்களாவர்.

சீட்டிழுப்பு வெற்றியாளர்கள் வெற்றி பெற்ற பணப் பரிசுத் தொகையை தனது குடும்பம் மற்றும் பிள்ளைகளின் எதிர்கால அபிவிருத்திக்காக மாத்திரம் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கினார்.

"வெற்றி பெற்ற தொகையை தனிப்பட்ட ரீதியில் வெற்றி பெற்றிருப்பினும் இத்தொகையை முறையாக உங்கள் வளர்ச்சிக்காகப் பயன்படுத்துங்கள்.

பிள்ளைகள் மற்றும் குடும்பத்தின் எதிர்காலத்துக்கு இதனை சிறந்த முதலீடாக ஈடுபடுத்திக் கொள்ளலாம். பாரிய தொகை கிடைத்தவுடன் அதனை அநாவசிய தேவைகளுக்கு பயன்படுத்துவதன் மூலம் இறுதியில் ஒன்றும் இல்லாத நிலைக்கு மீண்டும் தள்ளப்படலாம். சில கோடீஸ்வர சீட்டிழுப்பு வெற்றியாளர்கள் இவ்வாறான வெற்றிகளின் பின்னர் மோசமான நிதி மேலாண்மை காரணமாக ஏற்கனவே இருந்த நிலையைவிட கீழ் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இது போன்ற சந்தர்ப்பங்கள் பல நேர்ந்துள்ளன. அதனால் இந்தப் பணத்தை பிள்ளைகளதும், குடும்பத்தினதும் இறுதியாக நாட்டினதும் நலன் கருதி ஈடுபடுத்துங்கள்" – எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவர் அமித கமகே உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### போதை வர்த்தகத்துக்கு உதவிய குற்றம்:

# கைது செய்யப்பட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்குப் பிணை வழங்கல்!

போதைப் பொருள் வர்த்தகர் ஒருவருக்கு உதவி ஒத்தாசை வழங்கிய குற்றச்சாட்டில் தொம்பே பொலிஸ் நிலையத்தின் குற்றவியல் பிரிவு பொறுப்பதிகாரி கடுவலை பகுதியில் வைத்து வலான மோசடி தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரபாத் குணவர்தன என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் கூறினர்.

இந்நிலையில் அவரை பொலிஸார் கடந்த வியாழக்கிழமை கடுவலை நீதிவான் மஞ்சுள ஜயரத்ன முன்னிலையில் ஆஜர் செய்த நிலையில், அவர் 10 லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக அத்துருகிரிய பகுதியில் வலான துஷ்பிரயோக தடுப்புப் பிரிவினர் நடத்திய விசேட சுற்றிவளைப்பொன்றில் மெண்டி ரக போதைப் பொருளுடன் நபர் ஒருவரைக் கைது செய்திருந்தனர். அவர் பிரதான பொலிஸ் பரிசோதகருடன் தொடர்பில் இருந்துள்ளமை தெரிய வந்துள்ளது.போதைப் பொருள் வர்த்தகம் தொடர்பில் குறித்த பொலிஸ் அதிகாரி உதவி ஒத்தாசை புரிந்துள்ளமை தொடர்பில் தொலைபேசி தரவுகள் உள்ளிட்ட விடயங்களை மையப்படுத்தி தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்த நிலையிலேயே அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

சொகுசு கார் ஒன்றில் கடுவலை பகுதியில் பயணிக்கும் போது கைது செய்யப்பட்டிருந்த பிரதான பொலிஸ் பரிசோதகர் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

# மட்டக்களப்பு தேற்றாத்தீவில் ஆணின் சடலம் மீட்கப்பட்டது!

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேற்றாத்தீவு பகுதியில் உள்ள தோணாவில் பகுதியில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று வெள்ளிக்கிழமை காலை மீட்கப் பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் இது வரை அடையாளம் காணப்பட வில்லை.

சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிகுடி பொலிஸார் மேற் கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த
ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள்
யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.
விலை - 150/=







கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778

லக்சுமி வெதுப்பகம்
ஆறுகால் மடம்.
077 218 9718

# முன்னாள் பிரதமர் பண்டாரநாயக்காவின் 122 ஆவது ஜனன தினம் அனுஷ்டிப்பு!



மறைந்த முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ.டி.பண்டாரநாயக்காவின் 122 ஆவது ஜனன தினம் நேற்று (வெள்ளிக்கிழமை) அனுஷ்டிக்கப் பட்டது.

இதனை முன்னிட்டு காலி முகத்திடலில் அமைந்துள்ள பண்டாரநாயக்க உருவச் சிலைக்கு முன்பாக அவரை நினைவு கூரும் நிகழ்வு இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் சுனேத்ரா குமாரதுங்க ஆகியோர் முதலில் மலர் தூவி, அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை இலங்கை சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன மற்றும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு பண்டாரநாயக்க உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து, அஞ்சலி செலுத்தினர்.

காலைக்கதிர்
Kalaikkathir

**நேற்று நாடாளுமன்றத்தில் நாட்டின் தற்போதைய நிலை சம்பந்தமான விவாதத்தில் யாழ் மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் ஆற்றிய உரை இங்கு பிரசுரமாகின்றது.**



"இந்தத் தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள். பயங்கரவாதத் தடைச்சட்டம் பொதுவான எமது சட்டக் கொள்கைகளுக்கு முரணான சட்டம். குற்ற ஏற்பு வாக்குமூலத்தின் அடிப்படையில் சான் றுகள், சாட்சிகள் ஏதுமின்றியே தண்டனை வழங்கப்பட்டவர்கள் அவர்கள்."

# தமிழ் அரசியல் கைதிகளை தொடர்ந்து சிறையில் வைத்திருப்பது பெரும் அநீதி!

## நேற்று நாடாளுமன்றத்தில் எடுத்துரைத்தார் விக்னேஸ்வரன்

இந்த அரசாங்கம் எல்லா இலங்கை மக்களுக்குமான அரசாங்கம் அல்ல என்பதை சொல்லிலும் செயலிலும் நிரூபித்து வருகின்றது. தங்களுக்கு வாக்களித்த பௌத்த, சிங்கள மக்களின் விருப்பங்களுக்கு அமைவாகவே செயற்பட முடியும் என்று ஜனாதிபதி மற்றும் அரசாங்க உறுப்பினர்கள் வெளிப்படையாகவே கூறிவருகின்றனர்.

யாழ்ப்பாணம் மிருசுவில் பிரதேசத்தில் மூன்று சிறுவர்கள் உட்பட எட்டு தமிழர்களை படுகொலை செய்தமைக்காக மரண தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் இராணுவ அதிகாரி சுனில் ரத்னாயக்கவுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மன்னிப்பு அளித்து கடந்த வருடம் மார்ச் 26 ஆம் திகதி அன்று விடுதலை செய்துள்ளார். அதுவும் எந்தவித யுத்தமும் இடம்பெறாத இடத்தில் அவர் இந்தப் படுகொலையைச் செய்திருந்தார்.

குறிப்பாக சட்டம், ஒழுங்கு, பாதுகாப்பு துறைகளில் வேலை செய்பவர்கள் தவறிழைத்தால் அவர்களுக்கான தண்டனையைக் கடுமையாக நடைமுறைப்படுத்துவதே வழமையான நடைமுறையாகும். ஆனால் இங்கு தமிழர்களைப் படுகொலை செய்பவர்களுக்கே பதவி உயர்வுகளும், பதக்கங்களும், மன்னிப்புக்களும் வழங்கி ஊக்கிவிக்கப்படுகின்றனர்.

இத்தகைய காரணங்களினால்தான் கடந்த காலங்களில் எமது இளைஞர்கள் ஆயுதம் ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்டனர். ஒரே நாடு, ஒரே சட்டம் என அரசாங்கத்தின் எல்லா உறுப்பினர்களும் கூறி வருகின்றனர். ஆனால், நடைமுறையில் எமக்கென வேறு சட்டம் நீதிக்கு முரணான வகையில் பின்பற்றப்படுகின்றது. இதுதான் யதார்த்தம். உங்களைப் பொறுத்தவரையில் நாம் வேறு நாட்டைச் சேர்ந்தவர்கள். ஆகவே, எமக்கான நீதியை நாம் தான் சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக பெற்றுக் கொள்ளவேண்டும்.

எமது இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் நியாயமானது என்பதை இன்று சர்வதேச நீதியாக அரசாங்கத்தின் செயற்பாடுகளே நிரூபிக்கும் வகையில் அமைந்துள்ளன.



### நீங்களே தீர்மானியுங்கள்!

நாம் இலங்கையர்களாக முன்னோக்கி செல்லப் போகின்றோமா அல்லது தொடர்ந்தும் குறுகிய அரசியல் இலாபங்களுக்காக இனங்களாகப் பிரிந்து பின்னோக்கிச் செல்லப் போகின்றோமா என்பதை ஆட்சியாளர்களே தீர்மானிக்க வேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களும் இந்த நாட்டில் உரிய அதிகாரப் பகிர்வைப் பெற்று சமத்துவத்துடன் வாழ வேண்டும் என்று துணிச்சலுடன் குரல் கொடுக்கும் சிங்கள சகோதர சகோதரிமார், சிங்கள புத்திஜீவிகள், பௌத்த மதகுருமார் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எனது நன்றிகளை நான் இங்கு கூறி வைக்கின்றேன்.

### அரசியல் கைதிகளை ஏன் விடுவிக்க வேண்டும்?

தமிழ் அரசியல் கைதிகள் மன்னிப்பு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதற்கு பல காரணங்கள் உண்டு –

ஏற்கனவே நாட்டின் அரசாங்கத்தை மாற்றப் போர் புரிந்த ஜே.வி.பியினர் அனைவருக்கும் மன்னிப்பு வழங்கியாகிவிட்டது. எமது இளைஞர்கள் தமது உரிமைகளுக்காகவே போரிட்டவர்கள். அரசாங்கத்தை மாற்ற அல்ல. ஆகவே அவர்களை விடுவிக்க வேண்டும்.

போரில் தலைமைத்துவம் வகித்த, ஆணைகள் இட்ட தமிழ் இயக்க முக்கியஸ்தர்கள் பலர் அரசாங்கத்தால் மிக்க நெருக்கத்துடன் அணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். ஆனால் சாதாரண இயக்க அங்கத்தவர்கள் மிகக் கொடூரமாக நடத்தப்பட்டு பல காலமாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். ஏன் என்ற கேள்விக்குப் பதில் இல்லை.

கொரோனா தொற்றினால் அவஸ்தைப்படும் தமிழ் சிறைக் கைதிகளைத் தொடர்ந்து தென்னாட்டுச் சிறைகளில் வைத்திருப்பது அவர்களுக்கு பல பிரச்சினைகளைத் தந்து வருகின்றது. அவர்களை விசேடமாக வட கிழக்கு மாகாணங்களில் வைத்துத் தனிமைப்படுத்தினால் தாங்கள் பாதுகாப்பான இடங்களில் இருப்பதாகவாவது அவர்கள் உணர்வார்கள். பல தடவைகள் தமிழ்ச் சிறைக் கைதிகளை எங்கள் தென்னகச் சிறைகளில் கொடூரமாகத் தாக்கப்பட்டு கொல்லப்பட்டமை உங்கள் எல்லோருக்கும் நினைவிருக்கும்.

போர் முடிவிற்கு வர முன்னர் கைது செய்யப்பட்டு சிறைப்பட்டவர்களைப் போர் முடிந்து பத்து வருடங்களுக்கு மேல் ஆன படியால் அவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்குவதில் என்ன பிழை இருக்கின்றது?

### மிக மோசமான சட்டம்

இந்தத் தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள். பயங்கரவாதத் தடைச்சட்டம் பொதுவான எமது சட்டக் கொள்கைகளுக்கு முரணான சட்டம். குற்றஏற்பு வாக்குமூலத்தின் அடிப்படையில் சான்றுகள், சாட்சிகள் ஏதுமின்றியே தண்டனை வழங்கப்பட்டவர்கள் அவர்கள்.

உச்ச நீதிமன்றத்தில் நான் அளித்த நாகமணி வழக்கின் சாராம்சத்தை விளங்கிக் கொண்டு குற்ற ஏற்பு வாக்கு மூலத்துக்கு மேலதிகமாக சொல்லப்பட்ட குற்றம் உண்மையில் நடந்தது என்பதை ருசுப்படுத்த சாட்சியங்கள் பெறப்பட்டிருந்தால் பல வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பன. குற்றம் உண்மையில் புரியபட்டதா என்று அறியாமல் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை மட்டும் வைத்து தண்டனை வழங்குவது எவ்வாறு நியாயமாகும் என்பதை எமது ஜனாதிபதியும் அரசாங்க மேல் மட்டமும் பரிசீலித்துப் பார்க்க வேண்டும்.

பௌத்த நாடு என்று தம்பட்டம் அளிக்கும் இந்நாடு பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற சட்டக் கொள்கைகளுக்கு எதிரான சட்டத்தின் அடிப்படையில் அரசியல் காரணங்களுக்காக சிறைக்கைதிகளை தொடர்ந்து சிறையில் அடைத்து வைத்திருப்பதை சரியா பிழையா, நீதியா அநீதியா என்று பரிசீலித்துப் பார்க்க வேண்டும். பயங்கரவாதத் தடைச்சட்டம் அல்லாது நாட்டின் வழமையான சட்டத்தின் கீழ் தமிழ்ச் சிறைக் கைதிகளுக்கு எதிரான வழக்குகள் பதியப்பட்டிருந்தால் அத்தனை பேரும் தகுந்த சாட்சியங்கள் இல்லாததால் எப்போதோ விடுதலை செய்யப்பட்டிருப்பர். ஆகவே தமிழ் அரசியற் கைதிகளை உடனே மன்னித்து விடுதலை செய்ய வேண்டும் என்று கேட்டு என் பேச்சை முடித்துக் கொள்கின்றேன். – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நேர்மையான அரச அதிகாரிகள் பாதிக்கப்படாமல் அரசமைப்பில் பாதுகாப்பைப் பெற்றுத் தருவோம்!

## பிரதமர் மஹிந்த உத்தரவாதம்



நேர்மையாக மக்களுக்கு சேவை யாற்றிய எந்தவோர் அரச அதிகாரியும் தண்டிக்கப்படாத வகையில் அரசமைப்பில் பாதுகாப்பை பெற்றுத்தருவோம் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கிராமத்துடன் கலந்துரையாடலின் மூலம் வேலைத்திட்டத்துடன் கிராமத்துக்கு தேசிய வேலைத்திட்டத்தின் அரச அதிகாரிகளுக்கு தெளிவூட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் (வியாழக்கிழமை) அலரி மாளிகையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

2021 வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக நாம் பாரிய தொகையை உள்நாட்டு தொழிற்துறையை மேம்படுத்துவதற்காக ஒதுக்கீடு செய்துள்ளோம்.

இந்த வரவு - செலவுத்திட்டத்தில் பொது மக்களுக்கு எவ்வித நன்மையும் இல்லை என்று எமது விமர்சகர்கள் எம்மீது குற்றம் சுமத்தினர். எனினும் நாம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் காரணமின்றி நிதியை ஒதுக்கும் திட்டங்களை ஆரம்பித்ததில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

தேர்தலை எதிர்பார்த்து எவ்விடயமும் இந்த வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. நாம் மக்களுக்கு அவ்வாறான மோசடிகளை செய்யமாட்டோம் என்பதை நாம் ஏற்கனவே கூறியிருக்கின்றோம். இனிவரும் காலங்களிலும் அவ்வாறு செய்யப்போவதில்லை.

இந்த வரவு - செலவுத் திட்டம் கிராம விவசாயிகள், மீனவர்கள், தொழிலதிபர்கள் ஆகியோரை மேம்படுத்துவதற்கே ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த வரவு - செலவுத் திட்ட முன்மொழிவை செயற்படுத்துவதற்கு எமக்கு சர்வதேச நிபுணர்கள் அவசியமில்லை. அதனால் இந்த வரவு - செலவுத் திட்டத்தை எமது அரச அதிகாரிகளே செயற்படுத்தவுள்ளனர். இதனை நீங்களே கொண்டு செல்லவுள்ளீர்கள்.

இது கடினமானதொன்று என்பது எமக்குத் தெரியும். எனினும், அந்த கடினமான பணியை நீங்களே நிறைவேற்ற வேண்டும். இதுவரை செய்தவர்களும் நீங்களே. அதுவும் எமது நாட்டின் கிராம மக்களுடன் ஒன்றிணைந்து. அந்த மக்கள் தொழில் முனைவோருக்கான அறிவைப் பெற்ற, பெரும் பயிற்சி பெற்ற, நிறுவனங்களில் பணியாற்றி தேர்ச்சி பெற்றவர்கள் அல்லர். அவர்களுக்கு நீங்கள் உதவி செய்ய நேரிடும். அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் இடையே காணப்படும் இடைவெளியை குறைத்துக் கொள்ள வேண்டும். அரச அதிகாரிகளான நீங்கள் அரசாங்கத்தின் கருத்தை புரிந்துகொள்ள வேண்டும்.

கிராமத்துடன் கலந்துரையாடல் வேலைத்திட்டத்தை முன்னெடுத்து செல்லும்போது மக்களின் தேவை எமக்குப் புலப்படும். மேலும் ஓர் இயற்கை அனர்த்தத்தின் போது வெள்ள நிவாரணம் வழங்கியதற்காக முன்னாள் இராணுவத் தளபதியை எவ்.சி.ஐ.டிக்கு அழைத்து விசாரணை நடத்தியிருந்தமை எனக்கு ஞாபகம் இருக்கின்றது. சில் உடைகள் வழங்கியமைக்காக ஜனாதிபதி செயலாளர், தொலைத்தொடர்பு ஒழுங்குறுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுபெல்பிட்ட ஆகியோர் சிறைவைக்கப்பட்டமை நீங்கள் அறிவீர்கள். நாம் இந்நிலையை நன்கு உணர்ந்துள்ளோம்.

எனவே இதற்கு நாம் தீர்வொன்றை வழங்குகின்றோம். நேர்மையுடன் சேவையாற்றிய எந்தவோர் அதிகாரிக்கும் தண்டனை வழங்க முடியாது. எனவே, அதற்குத் தேவையான அரசமைப்பு ரீதியான பாதுகாப்பை வழங்குவதற்கு நாம் எதிர்பார்கின்றோம். சில் உடை வழக்கிலிருந்து விடுதலையான லலித் வீரதுங்க, முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் ஆகியோர் மக்களுக்கு என்ன கூறினர்? நேர்மையுடன் மக்களுக்கு சேவையாற்றும் எந்தவொரு தருணமும் எதிர்மறை விளைவை ஏற்படுத்தாது என்பதாகும். எனவே, காணப்படும் சட்ட திட்டங்களுக்கு மேலாக இந்த நிதி மக்களின் நலனுக்காக உபயோகிக்கும் முறை தொடர்பாக அனுபவம் வாய்ந்த நீங்கள் அறிவீர்களாகும். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சிறு, நடுத்தர அரிசி உற்பத்தியாளர்களுக்கு கடன் வசதி வழங்க பிரதமர் ஆலோசனை!



சிறு மற்றும் நடுத்தர அளவிலான அரிசி உற்பத்தியாளர்களுக்கு கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கினார்.

கடந்த (வியாழக்கிழமை), அகில இலங்கை சிறு மற்றும் நடுத்தர அரிசி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் பிரதிநிதிகளுடன் நாடாளுமன்ற குழு அறை 2 இல் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பாரியளவிலான அரிசி உற்பத்தியாளர்களின் பிரச்சினைகளுக்கு முன்னர், சிறு மற்றும் நடுத்தர அரிசி உற்பத்தியாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதமர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

நாட்டில் காணப்படும் உத்தரவாத நெல் விலைக்கு ஏற்ப பெப்ரவரி முதலாம் திகதி முதல் 6 மாதங்களுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்படும் அரிசிக்கான நிலையான விலையை பெற்றுக்கொடுப்பது உள்ளிட்ட கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது சிறு மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்களுக்கு நிவாரணமாகக் கடன்களைச் செலுத்துவதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்துவது தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலின்போது வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன, இராஜாங்க அமைச்சர்களான லசந்த அழகியவன்ன, ஹெரான் சேமசிங்க, இந்திக அநுருத்த, அஜித் நிவாட் கப்ரால், ஷீந்திர ராஜபக்ஷ, நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல, பிரதமரின் மேலதிக செயலாளர் சட்டத்தரணி சமிந்த குலரத்ன, வங்கி, சதோச மற்றும் நெல் விநியோக சபை அதிகாரிகள் உள்ளிட்ட அரச நிறுவனத் தலைவர்கள் மற்றும் சிறு மற்றும் நடுத்தர அரிசி உற்பத்தியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

# தனியார் வகுப்புகள் 25 முதல் ஆரம்பம்!

எதிர்வரும் 25ஆம் திகதி முதல் தனியார் வகுப்புகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சுகாதார வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டு கல்வி வகுப்புகளை ஆரம்பிக்க அனுமதி வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பயன்படுத்தியுள்ள முகக்கவசங்களை உரியவாறு அப்புறப்படுத்த கோரிக்கை!

பயன்படுத்திய முகக்கவசங்களை உரிய முறையில் அப்புறப்படுத்துமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் பொது மேலாளர் வைத்தியர் டெர்னி பிரதீப் குமார இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்போது, அப்புறப்படுத்தப்பட்ட சுமார் 150 கோடி முகக்கவசங்கள் கடலுக்குள் வீசப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே நாடு மற்றும் சுற்றுச்சூழலையும் கடற்கரையையும் பாதுகாக்க உதவுமாறும் பொதுமக்களிடம் அவர் கோரியுள்ளார்.

# ஒரே நாளில் 55 பேருக்கு தொற்று வவுனியா நகரை முடக்க ஏற்பாடு!

*வவுனியா நகர்ப்பகுதியில் 55 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக வவுனியா சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர்.*

*வவுனியா - பட்டாணிச்சூரில் 7 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில், வவுனியா நகர்ப் பகுதியில் கடந்த புதன்கிழமை திடீர் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.*

*இதன்போது நகர்ப்பகுதியிலுள்ள வர்த்தகர்கள், அங்கு பணியாற்றுவோர் மற்றும் பட்டாணிச்சூர் பகுதியில் இருந்து சட்ட விரோதமாக வெளியேறி வர்த்தக நிலையத்தைத் திறந்தவர்கள் என 204 பேருக்கு இவ்வாறு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.*

*இந்நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை அவர்களுக்கான முடிவுகள் வெளிவந்துள்ள நிலையில் 55 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.*

*இதனால் வவுனியா நகரை மீண்டும் முடக்கி அங்குள்ளவர்களுக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ள சுகாதார பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.*



காலைக்கதிர் Kalaikkathir

# விமலுக்கு எதிராக ரிஷாத் முறைப்பாடு!

## ஜனாதிபதி ஆணைக்குழு முன்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக விசாரணை செய்து வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கைகள் வெளிவருவதற்கு முன்னர், அது தொடர்பில் தன்னை சம்பந்தப்படுத்தி குற்றஞ் சுமத்தியுள்ள அமைச்சர் விமல் வீரவன்ஸவின் நடவடிக்கைகள் தொடர்பாக, அதே ஆணைக்குழுவில் மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் நேற்று (வெள்ளிக்கிழமை) முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளார்.

தனது சட்டத்தரணி ருஷ்தி ஹபீபுடன் இணைந்து, இந்த முறைப்பாட்டை நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் செய்துள்ளார்.



அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர் -

விமல் வீரவன்ஸவின் இனவாதக் கருத்துக்களையும் அப்பட்டமான பொய்களையும், பிழையான குற்றச் சாட்டுக்களையும் கண்டித்தமையுடன் அது தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு உரிய கவனம் செலுத்துமெனவும் நம்பிக்கை வெளியிட்டார்.

இதன்போது ஜனாஸா விவகாரம் தொடர்பில் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த அவர் -

கொரோனா ஜனாஸாக்களை தொடர்ந்தும் எரிக்க வேண்டுமென்ற அரசின் நிலைப்பாடு அப்பட்டமான பழிவாங்கல் நடவடிக்கை ஆகும்.

இலங்கை வாழ் இருபது லட்சம் முஸ்லிம்களும் இன்று துன்பத்திற்கு உள்ளாகியுள்ளனர். அதுமாத்திரமன்றி, உலகிலுள்ள சுமார் இரண்டு பில்லியன் முஸ்லிம்களும் கவலையில் இருக்கின்றமையோடு, பல நாடுகள் இலங்கைக்கு எதிரான எதிர்ப்பையும் வெளியிட்டு வருகின்றன. இதன் விளைவு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி, நாட்டையும் சமூகங்களையும் பாதிக்கும்.

முஸ்லிம் சமூகத்தை இந்த அரசு பழிவாங்குவதற்காகவே எமது மத உரிமையை தடுத்து நிறுத்துகின்றது. அரசியலில் ஞானம் உள்ளவர்களாக இருந்தால் இவ்வாறான பிற்போக்குத்தனமான செயலை செய்ய மாட்டார்கள்.

முஸ்லிம் அரசியல்வாதிகள், மதத்தலைவர்கள், புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்கள் மற்றும் மனிதநேயமுள்ள மாற்று மத பிரமுகர்களும் இதனை வென்றெடுப்பதில் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் நாட்டின் முன்னாள் தலைவர்களான சந்திரிக்கா பண்டாரநாயக்க, மைத்திரிபால சிறிசேன மற்றும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் இதற்காக குரல் எழுப்பி வருகின்றபோதும், அரசும் சுகாதார அமைச்சும் இன்னும் செவிடன் காதில் ஊதிய சங்கு போலதான் இருக்கின்றன.
- என அவர் குறிப்பிட்டுள்ளார்

# கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்க கோட்டா அரசு தீர்மானமாம்!

## எதிரணி எம்.பி. அசோக அபேசிங்க சபையில் போட்டுடைப்பு

கொழும்பு துறைமுகத்தை சர்வதேச நாடுகளுக்கு ஒருபோதும் கொடுக்க மாட்டோம் என நாடாளுமன்றத்தில் பிரதமர் வாக்குறுதி கொடுத்துவிட்டு, தற்போது 70 கோடி அமெரிக்க டொலர்களுக்கு 35 ஆண்டுகளுக்கு இந்தியாவின் அதானி நிறுவனத்துக்குக் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை குத்தகைக்கு கொடுக்க அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளதாக எதிர்க்கட்சி உறுப்பினர் அசோக அபேசிங்க சபையில் தெரிவித்தார்.

அதேபோல் சர்வதேச கடன்களைப் பெற்றுக்கொள்ள மாட்டோம் என அரசாங்கம் கூறிக்கொண்டு இந்தியா, சீனா மற்றும் கொரியா ஆகிய நாடுகளிடம் இருந்து 3.4 பில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்றுக்கொள்ளவுள்ளதாகவும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை, துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டு சட்டத்தின் கீழான கட்டளைகள், உற்பத்தி வரி சட்டத்தின் கீழான கட்டளைகள், நிதிச் சட்டத்தின் கீழான கட்டளைகள், செயல்நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் புலமைச்சொத்து திருத்த



சட்டமூலங்கள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் -

கொழும்பு துறைமுகத்தை ஒருபோதும் விற்கவும் மாட்டோம், குத்தகைக்கு கொடுக்கவும் மாட்டோம் என பிரதமர் சபையில் தெரிவித்தார், ஆனால் 70 கோடி அமெரிக்க டொலர்களுக்கு 35 ஆண்டுகளுக்கு இந்தியாவின் அதானி நிறுவனத்துக்கு கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை குத்தகைக்கு கொடுக்க அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளது, அது தொடர்பாக ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தப்படுகின்றது.

இது இலங்கை ரூபாவில் 13 ஆயிரத்து 300 கோடி ரூபாவாகும். ஆகவே இந்த விடயத்தில் நாடாளுமன்றத்தில் மிகப்பெரிய பொய் ஒன்றைக்கூறி பிரதமர் அனைவரையும் ஏமாற்றிவிட்டார். இன்று அமைச்சர்கள் அனைவரையும் கூப்பிட்டு இதற்கான இணக்கத்தை பெற்றுக்கொள்ள பேச்சு நடத்தப்படுகின்றது.

கடன்களைப் பெற்றுக்கொள்ள மாட்டோம், முதலீடுகளை மட்டுமே நாம் பெற்றுக்கொள்வோம் என அரசாங்கம் கூறினாலும் சீனாவிடம் இருந்து 1.3 பில்லியன் அமெரிக்க டொலர்கள் கடனையும், இந்தியாவிடம் இருந்து ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களையும், கொரியாவிடம் இருந்து 90 கோடி அமெரிக்க டொலர்களையும் பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

ஆகவே இந்த மூன்று நாடுகளிடமும் இருந்து 3.4 பில்லியன் அமெரிக்க டொலர்களை அரசாங்கம் பெற்றுக்கொள்ளத் தீர்மானம் எடுத்துள்ளது. இவ்வாறான கடன்களின் மூலமாக நாடு மேலும் நெருக்கடிக்குள் விழப்போகிறது எனவும் அவர் கூறினார்.

# ஒருவருக்குத் தொற்று; உடனே மூடப்பட்டது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு!

கொழும்பு, ஜன.09

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) உரை யாற்றிய கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் கடமையாற்றும் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையிலேயே, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கிழக்கில் அரச சேவைக்கான வருடாந்த இடமாற்றம் உடன் அமுலுக்கு வரும் வகையில் இடைநிறுத்தம்!

கிழக்கு மாகாணத்தில் 2021 ஆம் ஆண்டின் அரச இணைந்த சேவைக்கான வருடாந்த இடமாற்றங்கள் உடன் அமுலுக்கு வரும் வகையில் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

18.01.2021 இலிருந்து இடம்பெறவிருந்த மாகாண இடமாற்றங்கள் அனைத்தும் ஆளுநரின் பணிப்புரைக்கமைய தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

மாகாணத்தில் நிலவும் கொவிட்-19 நிலைமை காரணமாக அதனைக் கட்டுப்படுத்தும் நோக்கிலும், கிழக்கு மாகாணத்தில் பரவலான பகுதிகள் முடக்கப்படுவதால் அதனை முறையாக செய்வதற்கு முடியாத காரணத்தால் அனைத்து இடமாற்றங்களையும் தற்காலிகமாக நிறுத்துமாறு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் பணிப்புரை விடுத்துள்ளார்.

# கொரோனா சிவப்பு வலயங்களாக கிழக்கில் 6 பிரதேசங்கள் பிரகடனம்

## கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் தகவல்

கிழக்கில் 6 பிரதேசங்கள் கொரோனா சிவப்பு வலயங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன என கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்தியர் அ.லதாகரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு - திருகோணமலை நகர், காத்தான்குடி, அட்டாளைச்சேனை, கல்முனை தெற்கு, சாய்ந்தமருது, உகண ஆகிய 6 சுகாதார பிரிவுகள் சிவப்பு வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் காரியாலயத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அ.லதாகரன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த ஊடக சந்திப்பில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

பேலியகொடை மீன் சந்தைக்கு பின்னர் கிழக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனையின் மூலம் கடந்த வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 58 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதில் மூதூர் பிரதேசத்தில் 5 பேருக்கும், தம்பலகாமத்தில் ஒருவருக்கும் திருகோணமலையில் 4 பேருக்கும் கல்முனை தெற்கில் 8 பேருக்கும் சாய்ந்தமருதில் ஒருவருக்கும், நிந்தவூரில் 5 பேருக்கும், ஏறாவூர் பிரதேசத்தில் 3 பேருக்கும், மட்டக்களப்பு நகரத்தில் ஒருவருக்கும், காத்தான்குடியில் 20 பேருக்கும், வெல்லாவெளி பிரதேசத்தில் ஒருவருக்கும், அம்பாறையில் இருவருக்கும், உகண பிரதேசத்தில் 7 பேருக்கும் என 58 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை அம்பாறை உகண பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய பெண் ஒருவர் தொற்றுள்ளவராக அடையாளம் காணப்பட்டு சிறுநீரக சிகிச்சைக்காக கொழும்பிலுள்ள வைத்தியசாலையில் மாற்றப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளமையையடுத்து கிழக்கில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 9 ஆக அதிகரித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் கல்முனை நகரப்பகுதியில் சில கிராமசேவகர் பிரிவும் காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவும் திருகோணமலை நகர் ஆகிய 3



பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் கிழக்கில் 6 பிரதேசங்கள் கொரோனா சிவப்பு வலயங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. விசேடமாக இந்த பகுதியிலுள்ள மக்கள், சுகாதார துறைக்கும் மற்றும் கொரோனா சம்பந்தமாக செயற்படுகின்ற அனைத்து தரப்பினருக்கும் ஒத்துழைப்பை பூரணமாக வழங்கும் பட்சத்தில் மட்டும்தான் இந்த தனிமைப்படுத்தலை மிக விரைவில் நீக்கமுடியும்.

கிழக்கில் தொற்றின் தாக்கம் அதிகரித்து வருகின்றது. எனவே தொடர்ச்சியாக மக்கள் சுகாதார அமைச்சின் சுகாதார நடைமுறைகளைக் கடைபிடிக்க வேண்டும்.
- என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# வெளிநாட்டில் சிக்கியுள்ள இலங்கையர்களை மீட்க வலியுறுத்தி மக்கள் சக்தி ஆர்ப்பாட்டம்!







வெளிநாட்டில் உள்ள இலங்கை சமூகத்தின் மீது கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர்களின் பாதுகாப்பு மற்றும் திருப்பி அனுப்பப்படுகின்றமையை உறுதி செய்ய வேண்டும் என்றும் கோரி ஐக்கிய மக்கள் சக்தி அமைப்பு கடந்த வியாழக்கிழமை மாலை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் முன் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியது.

இந்த போராட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ, மக்கள் பிரதிநிதிகள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நாட்டுக்கு அந்நிய செலாவணியைக் கொண்டுவரும் இலங்கையர்கள் தேர்தலுக்கு முன்னர் 'நாட்டு வீராங்கனைகள்' என்று அழைக்கப்பட்டனர். ஆனால், இன்று அரசாங்கம் வெளிநாட்டில் அவர்கள் எதிர்நோக்கும் துன்பத்தை கண்டும் காணமலும் இருந்து வருகின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு தொழிலாளர்கள் ஒரு மாஃபியாவில் சிக்கியுள்ளமையால் இந்த இழிவான செயல்முறையை அரசாங்கம் நிறுத்த வேண்டும் என்று அவர் கூறினார்.

# இந்திய வீட்டுத் திட்டத்தை மீள ஆரம்பிக்க வேண்டும்!

## தமிழ் முற்போக்கு கூட்டணி கோரிக்கை



மலையகத்தில் கடந்த ஒரு வருடமாக எந்தவோர் அபிவிருத்தியும் வாக்குறுதி, அறிவிப்பு என்ற அளவுகளில் மட்டுமே நிற்கின்றது. எனவே, இந்திய தோட்டத் துறை வீட்டு மற்றும் நலத்திட்டங்கள் உடன் மீள ஆரம்பிக்கப்படவேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி இந்தியாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரை, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தூதுக்குழு நேற்றுமுன்தினம் (வியாழக்கிழமை) கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் சந்தித்து, பேச்சு நடத்தியது.

கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தலைமையிலான குழுவில் பிரதி தலைவர் இராதாகிருஷ்ணன், பொதுச் செயலாளர் சந்திரா சாப்டர் ஆகியோர் இடம் பெற்றனர்.

இதன்போது இலங்கைவாழ் இந்திய வம்சாவளி மக்கள் மற்றும் ஒட்டுமொத்த தமிழ் மக்கள் தொடர்பிலான பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன.

கடந்த ஒருவருடமாக மலையகத்தில் எந்தவோர் அபிவிருத்தியும் வாக்குறுதி, அறிவிப்பு என்ற அளவுகளில் மட்டுமே நிற்கிறது. ஆகவே இந்திய தோட்டத் துறை வீட்டு மற்றும் நலத்திட்டங்கள் உடன் மீள ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இராமேஸ்வரம் – மன்னார், தூத்துக்குடி – கொழும்பு கப்பல் சேவையை ஆரம்பிக்க உங்கள் பக்கத்தில் ஆவண செய்யுங்கள், நோர்வூட் கிளங்கன், நுவரெலியா வைத்தியசாலைக்கு பி.சி.ஆர். இயந்திரங்கள் இரண்டு கொடுங்கள், இந்தியா, இலங்கையின் உண்மை நண்பன் என்பதை சிங்கள மக்களுக்கு விளக்கி கூறி எடுத்து காட்டுங்கள் ஆகிய கோரிக்கைககள் தமிழ் முற்போக்கு கூட்டணியால் இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் முன்வைக்கப்பட்டது.

அத்துடன், 13 ஆம் திருத்தம், மாகாணசபைகள் தொடர்பான இந்திய நிலைப்பாடு வரவேற்கத்தக்கது. புதிய அரசமைப்பு வரைவு குழுவுக்கு, தமிழ் முற்போக்கு கூட்டணி யோசனைகளை முன் வைத்துள்ளது.

எதிரணியில் இருந்தாலும் நாமே, இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களின் பெரிய அரசியல் இயக்கம், இன்றைய இலங்கை அரசு செல்வாக்கு இழந்து வருகிறது.

வெகு விரைவில் இனவாதம் இல்லாத இலங்கையை எமது தேசிய கூட்டணி உருவாக்கும், ஆகிய கருத்துகளும் தமிழ் முற்போக்கு கூட்டணியால், இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் எடுத்து கூறப்பட்டன.

மேலும், இன்றைய நரேந்திர மோடி அரசே, இலங்கையில் வாழும் எமது மக்கள் மீது அதிக அக்கறை காட்டுகிறது. அதன் பிரதிபலிப்பாகவே, இந்தியாவுக்கு வெளியே மிகப்பெரும் மக்கள் கூட்டத்தை நாம் பிரதமர் மோடிக்காக நோர்வூட்டில் கூட்டினோம் என தமிழ் முற்போக்கு கூட்டணியினர் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரிடம் கூறி, பிரதமர் நரேந்திர மோடிக்கு வாழ்த்துகளை தெரிவித்து கொண்டனர்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருடன் இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே மற்றும் தூதரக அதிகாரிகள், சந்திப்பின் போது கலந்து கொண்டனர்.

# முகக்கவசம் அணியாமல் நடமாடிய மூவருக்குக் கொரோனாத் தொற்று!

முகக்கவசம் அணியாதவர்களைக் கைதுசெய்து, ரபிட் அன்டிஜன் அல்லது பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்துகின்ற திட்டத்தின் மூலம் கைது செய்யப்பட்டவர்களில் மூவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

முகக்கவசம் அணியாது பொது இடங்களில் நடமாடிக் கொண்டிருந்த 377 பேர், கடந்த (வியாழக்கிழமை) கைது செய்யப்பட்டனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

மேலும், அவர்களுள் 220 பேர் அன்டிஜன் பரிசோதனைக்கும், 157 பேர் பி.சி.ஆர். பரிசோதனைக்கும் உட்படுத்தப்பட்டனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பரிசோதனையிலேயே மூவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அஜித்



றோஹண சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை மீன் கடைகள், மரக்கறிக் கடைகள் மற்றும் பொருளாதார மத்திய நிலையங்களில் கொரோனா தொற்றாளர்களை இனங்காண்பதற்கான பரிசோதனைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறியுள்ளார்.

## தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

### பஞ்சாங்கப்படி விவசாயம் – சாத்தியமா?

- அமாவாசையிலிருந்து பௌர்ணமி வரையிலான நாள்களில், தக்காளி, வெள்ளரி, சோளம் போன்ற தரைக்கு மேலே பலன்தரக்கூடிய ஒரு பருவ பயிரை நடலாம்.
- பௌர்ணமியிலிருந்து அமாவாசை வரையிலான நாள்களில், வெங்காயம், கேரட், பீற்றூட் மற்றும் உருளைக்கிழங்கு போன்ற தரைக்கு கீழே பயன்தரக் கூடிய இரு பருவப் பயிரை நடலாம்.
- சந்திரன் முதல் கால் பாகத்தில், தரைக்கு மேலே பலன் தரக்கூடிய, இலைச் செடிகளையும், பழத்திற்கு வெளியே விதை தரக்கூடிய செடிகளான,முட்டை கோசு, காலிப்பிளவர்,வெங்காயம் மற்றும் கீரை வகைகளை நடலாம்.
- சந்திரன் இரண்டாம் கால் வளாகத்தில் இருக்கும் போது ஒரு பருவத் தாவரமான தரைக்கு மேல் பலன் தரக்கூடிய கொடி வகைகளையும், பழத்தின் உள்விதை இருக்கும் செடிகளான பீன்ஸ், கத்திரி, பட்டாணி, மிளகு, தக்காளி மற்றும் தர்பூசணி போன்ற செடிகளை நடலாம்.
- சந்திரன் மூன்றாம் கால் பாகத்தில் இருக்கும் போது இரு பருவச் செடிகள், பல்லாண்டு தாவரங்கள், தண்டு மற்றும் வேர் பலன்தரக்கூடிய தாவரங்கள் போன்ற, பீற்றூட், பூண்டு, கரட், வெங்காயம் விதை, உருளைக்கிழங்கு, முள்ளங்கி,மற்றும திராட்சை போன்ற செடிகளைப் பயிரிடலாம்.
- சந்திரனின் நான்காம் கால் பாகத்தில், எதுவும் நடவு செய்ய கூடாது, அச்சமயம் களை எடுப்பு, பூச்சிக் கட்டுப்பாடு போன்ற விவசாய வேலைகளைச் செய்யலாம்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

காலைக்கதிர் Kalaikkathir

# மாகாணயசபைத் தேர்தல் நடக்கவே நடக்காதாம்!



## அடித்துக் கூறுகிறார் டலஸ்

**கொவிட் - 19 வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படமாட்டாது. புதிய தேர்தல் முறைமையில் மாகாணசபைத் தேர்தலை எதிர்காலத்தில் நடத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது.**

**நடைமுறையில் உள்ள தேர்தல் முறைமையின் சாதகத் தன்மையை உள்ளடக்கி முரண்பாடற்ற தேர்தல் முறைமை விரைவில் அறிமுகப் படுத்தப்படும் என மின்சாரத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.**

கம்புறுபிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக மாறுபட்ட பல கருத்துக்கள் குறிப்பிடப்படுகின்றன. கொவிட் -19 வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் மாகாண சபை தேர்தல் நடத்தப்படமாட்டாது என்பதை உறுதியாக குறிப்பிட முடியும். தேர்தல் முறைமையில் பாரிய சிக்கல் தன்மை காணப்படுகிறது. இதற்கு பல்வேறு அரசியல் மற்றும் பொது காரணிகள் தாக்கம் செலுத்தியுள் ளன.

மாகாணசபை தேர்தல் மக்களின் ஜனநாயக உரிமையுடன் தொடர்புபட்டுள்ளது. ஆகவே மாகாண சபைதேர்தலை புதிய தேர்தல் முறையில் எதிர்காலத்தில் நடத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது. மாகாண சபை தேர்தல் சிறந்த நோக்கங்களைக் கொண்டு உருவாக்கப்பட்டது. ஆனால் காலப்போக்கில் மூல கொள்கையின் நோக்கம் மறுதளிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தேர்தல் முறைமை நகைப்புக்குரியதாகக் காணப்படுகிறது. அரச நிர்வாகம் - ஜனாதிபதி, நாடாளுமன்றம், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றம் ஊடாக முன்னெடுக்கப்படுகிறது.

ஜனாதிபதி தேர்தல் மாத்திரம் இது வரையில் சிறந்த தேர்தல் முறைமை ஊடாக நடத்தப்பட்டுள்ளது. ஏனைய தேர்தல்கள் காலத்திற்கு காலம் மாறுபட்ட தேர்தல் முறைமைகளில் நடத்தப்பட்டுள் ளன. இது பொருத்தமற்றதாகும்.

தற்போது நடைமுறையில் உள்ள தேர்தல் முறைமைகளின் சாதக தன்மைகளைப் பாதுகாத்து, முரண்பாடற்ற தேர்தல் முறைமையை புதிய அரசமைப்பின் ஊடாக அறிமுகப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. தேர்தல்களை நடத்தும் தேர்தல் முறைமை முரண்பாடற்றதாகக் காணப்பட வேண்டும்.

கொவிட் - 19 வைரஸ் தாகக்த்தால் பாதிக்கப்பட்ட சேவைக் கைத்தொழில் பல மீண்டும் சுகாதார பாதுகாப்புக்கு மத்தியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொவிட் - 19 வைரஸ் காரணத்தால் வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை அரசாங்கத்தின் பலவீனம் என்று எதிர்க் கட்சியினர் குறிப்பிடுகின்றமை பொருத்தமற்றதாகும். பாரிய சவால்கள் எழுந்துள் ளன. அனைத்து சவால்களையும் அரசாங்கத்தால் மாத்திரம் வெற்றிக் கொள்ள முடியாது.

கொவிட் - 19 வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் சவால்களை வெற்றிக்கொள்ள நாட்டு மக்கள் சுகாதார தரப்பினருக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும். சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றமுடியாதவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை பாதுகாப்பு தரப்பினரால் முன்னெடுக்கப்படுகிறது.

இவ்வாறான செயற்பாடுகள் நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முன்னெடுக்கும் நடவடிக்கையாகும். வெகுவிரைவில் அனைத்து சவால்களையும் மக்களின் ஒத்துழைப்புடன் வெற்றிக்கொள்ள முடியும். - என்றார்.

# வடக்கில் 161 விபத்துக்களில் 172 பேர் கடந்த ஆண்டு சாவு!

## முந்தைய ஆண்டை விடக் குறைவாம்

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம்,ஜன.09

வடக்கின் 5 மாவட்டங்களிலும் 2020 ஆம் ஆண்டு 161 விபத்துக்கள் ஏற்பட்டுள்ளமையோடு இதன்போது 172 பேர் உயிரிழந்தனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் வியாழன் அன்று நடைபெற்ற 5 மாவட்டச் செயலாளர்கள், பொலிஸார், பாதுகாப்பு படையினர், துறைசார் அதிகாரிகளுடனான சந்திப்பின்போதே மேற் படி தகவல் பொலிஸாரினால் தெரிவிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் 2020ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 69 விபத்துக்களில் 71 பேர் உயிரிழந்துள் ளனர். 2019ஆம் ஆண்டு 86 விபத்துக் களில் 86 பேர் உயிரிழந்திருந்திருந்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 2020ஆம் ஆண்டு 34 விபத்துக்களில் 34 பேர் உயிரிழந்திருந்தனர். 2019ஆம் ஆண்டு 44 விபத்துக்களில் 44 பேர் உயிரிழந்தனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் 2020ஆம் ஆண்டு 16 விபத்துக்களில் 18பேர் உயிரிழந்த நிலையில் 2019ஆம் ஆண்டு 36 விபத்துக்களில் 38 பேர் உயிரிழந்திருந்தனர்.

இதேபோன்று வவுனியா மாவட்டத்திலே 2020ஆம் ஆண்டு 31 விபத்துக்களில் 37 பேர் உயிரிழந்துள்ளனர். இருப்பினும் 2019ஆம் ஆண்டு 21 விபத்துக் களில் 21 பேர் உயிரிந்தனர்.

இதேபோன்று மன்னார் மாவட்டத்தில் 2020 ஆம் ஆண்டு 11 விபத்துக் களில் 12 பேர் உயிரிழந்தமை போன்று 2019ஆம் ஆண்டு 16 விபத்துக்களில் 17 பேர் உயிரிழந்துள்ளனர்.

இவற்றின் அடிப்படையில் வடக்கு மாகாணத்தில் 2019ஆம் ஆண்டு 203 விபத்துக்கள் இடம்பெற்றபோது 206 பேர் உயிரிழந்தனர். 2020ஆம் ஆண் டில் 161விபத்துக்களில் 172 பேர் உயிரிழந்தனர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# தயாசிறிக்குக் கொரோனாத் தொற்று; அமைச்சர்கள் பலர் தனிமைப்படுத்தல்



இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகரவுக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் தனிமைப் படுத்தப்பட வுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

சுகாதார அமைச்சால் இது தொடர்பான அறிவித்தல் வழங்கப்பட்டிருக்கின்றது - எனக் கூறப்படுகின்றது.

இராஜாங்க அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளருமான தயாசிறி ஜயசேகரவுக்கு வியாழன் அன்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

இதையடுத்து அவர் காலி - ஹிக்கடுவ பகுதியிலுள்ள விடுதியொன்றில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

அவருடன் அண்மைக்காலமாக நெருங்கியிருந்த அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் தனிமைப்படுத்திக் கொள்ளும்படி சுகாதார அமைச்சின் ஊடாக ஆலோசனை வழங்கப்பட்டிருக்கின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# தயாசிறி ஜயசேகர இம்மாதம் நாடாளுமன்று செல்லவில்லை

## சபை நடவடிக்கையை நடத்துவதில் பிரச்சினை இல்லையாம்

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ள இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர கடந்த 5 ஆம் திகதி முதல் நாடாளுமன்றம் செல்லவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற படைகள் சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டுக்கான முதலாவது நாடாளுமன்ற அமர்வு கடந்த 5 ஆம் திகதி ஆரம்பமானது.

தாம் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளார் எனத் தயாசிறி ஜயசேகர தனக்கு அறிவித்ததன் பின்னர், நாடாளுமன்றத்திலுள்ள சி.சி.ரி.வி. கமராக்களை ஆராய்ந்ததில் அவர் நாடாளுமன்றத்துக்குக் கடந்த சில தினங்களில் வருகைதரவில்லை என்பது உறுதியாகியுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

இதனால், நாடாளுமன்ற சபை நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் நடத்திச் செல்வதில் எந்தவித பிரச்சினையும் கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நானே சு.கவின் தலைவர்

## மைத்திரி சட்டவிரோத தலைவர்; சந்திரிகா அம்மையார் அதிரடி



தானே தற்போதும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகத் தலைவர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் 122 நினைவு தினம் காலி முகத்திடலில் அமைந்துள்ள அவரது உருவச் சிலைக்கு முன்பு நேற்று காலை நடைபெற்றது.

இதில் கலந்துக்கொண்டு அஞ்சலி செலுத்திய பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, சுனேத்ரா பண்டாரநாயக்க ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்

இதன் பின்னர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மலரஞ்சலி செலுத்தினார்.

இதன்போது ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பின்வருமாறு பதிலளித்தார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க.

கேள்வி:- உங்கள் தந்தை ஆரம்பித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைபற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்:- என்ன நினைக்க வேண்டும்.?

கேள்வி:- சுதந்திரக் கட்சி பயணிக்கும் பாதை சரியானதா?

பதில்:- எந்தப் பயணமும் இல்லை. இதில் சரி, பிழை எனக் கூறுவது எப்படி?

கேள்வி:- சுதந்திரக் கட்சிக்கு தற்போது அநீதி இழைக்கப்படுவதாக தற்போது இருப்பவர்கள் கூறுகின்றார்களே?

பதில்:- இதனை ஒரு வருடத்துக்கு முன்பே நான் கூறி விட்டேன். தற்போது கட்சியின் தலைவராக இருப்பவர் சட்டவிரோதமாகவே உள்ளார்.

கேள்வி:- இன்றைய நினைவு அஞ்சலி நிகழ்வுக்கு உங்களுக்கு அழைப்பு கிடைக்கவில்லையா?

பதில்ள இல்லை. எந்தவித அழைப்பும் கிடைக்கவில்லை. அவர்களுக்கு இந்த இடம் சொந்தமில்லை. நாம் விரும்பிய நேரத்தில் இங்கு வருவோம் - என்றார்.

இதையடுத்து மலரஞ்சலி செலுத்திய முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேனவிடமும் ஊடகவியலாளர்கள் கேள்விகளை எழுப்பினர்.

கேள்வி:- தானே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் என்றும், நீங்கள் சட்டவிரோதமாகவே தலைவர் பதவியில் இருப்பதாகவும் சந்திரிகா கூறுகின்றார். உங்கள் பதில் என்ன?

பதில்:- அப்படியில்லை. நாம் அனைவரும் ஒன்றிணைந்தே செயற்படுகின்றோம் எமக்குள் பிளவுகள் இல்லை.

கேள்வி:- தொடர்ந்தும் அரசுடன் இணைந்து பயணிப்பீர்களா? சுதந்திரக் கட்சி கலக்கமடைந்துள்ளதா?

பதில்:- இன்னும் காலமுண்டு. பார்க்கலாம் - என்றார்.

# கிழக்கு முனையத்துக்கான எதிர்ப்பை தவிர்க்கவே துறைமுகசேவை அத்தியாவசிய சேவையாகியது!

## ரில்வின் சில்வா குற்றச்சாட்டு

ரணில் – மைத்திரி ஆட்சியில் தேசிய சொத்துக்கள் விற்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து அவற்றை பாதுகாப்பதற்காக ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய மக்கள் தற்போது அரசாங்கத்திடமிருந்து தேசிய சொத்துக்களைப் பாதுகாப்பதற்காகப் போராடுகின்றனர்.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவிற்கு வழங்கும் போது எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படக் கூடாது என்பதற்காகவே துறைமுகசேவையை அத்தியாவசிய சேவையாக அரசாங்கம் பிரகடனப்படுத்தியிருக்கிறது என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணி தலைமை அலுவலகத்தில் கடந்த வியாழக் கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை அந்நியர்களுக்கு தாரை வார்க்கும் முயற்சியைக் கைவிடாமல் அரசாங்கம் தொடர்ச்சியாக அதன் செயற்பாடுகளை முன்னெடுத்துக் கொண்டிருக்கிறது. ரணில் – மைத்திரி ஆட்சியில் காணப்பட்ட பொருளாதார கொள்கையே தற்போதைய அரசாங்கத்திடமும் காணப்படுகிறது. மக்களால் ரணில் விக்கிரமசிங்க தோற்கடிக்கப்பட்டாலும் அவரது பொருளா தார கொள்கைகள் தோல்வியடையவில்லை. எனவே தற்போது எதிர்பார்ப்புக்களுடன் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய வாக்காளர்களே தோல்வியடைந்துள்ளனர்.

தேர்தல் காலத்தில் தேசிய சொத்துக்கள் விற்கப்படமாட்டாது என்றும் சீனாவிடமிருந்து அம்பாந்தோட்டை துறைமுகம் மீட்கப்படும் என்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்தார். அது மாத்திரமின்றி ரணில் – மைத்திரி ஆட்சி காலத்தில் அவர்களால் வழங்கப்படும் தேசிய சொத்துக்களை வாங்க வேண்டாம் என்றும் அவர் சர்வதேசத்தை எச்சரித்தார். ஆனால் பிரதமர் உள்ளிட்ட அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்கு முரணாகவே செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

தற்போது நாட்டில் 15 ஆயிரம் பில்லியன் ரூபா கடன் சுமை காணப்படுகிறது. இவ்வாறிருக்கையில் மேலும் கடனைப் பெறவே அரசாங்கம் முற்படுகிறது. மொத்த கடன் தொகையில் சுமார் 40 வீதம் வெளிநாட்டு கடன்களாகும். தேசிய கடன்களை மீள செலுத்துவதற்கு அரசாங்கம் மேலதிகமாக நாணயத்தாள்களை அச்சிடுகிறது. ஆனால் வெளிநாட்டுக் கடன்களை மீளச் செலுத்துவதற்கு அவ்வாறு செய்ய முடியாது. டொலர்களை வருமானமாகப் பெற வேண்டும். ஆனால் தற்போது டொலர்களை ஈட்டுவதற்கான எந்த வழியும் இல்லை. இதற்கான ஒரு வழிமுறையாகவே தேசிய சொத்துக்கள் வெளிநாடுகளுக்கு விற்கப்படுகின்றன.

2021 ஆம் ஆண்டு வெளிநாட்டு கடன்களுக்காக அரசாங்கத்தால் சுமார் 5.8 பில்லியன் டொலர் வட்டி செலுத்தப்பட வேண்டியுள்ளது. எனினும் இதனை செலுத்துமளவிற்கு வருமாம் நாட்டில் இல்லை. டொலர் வருமானத்தை அதிகரிப்பதற்கான முயற்சிகளை முன்னெடுக்காமல் தேசிய சொத்துக்களை விற்கும் நடவடிக்கையையே அரசாங்கம் முன்னெடுக்கிறது. தேசிய சொத்துக்களை விற்பதை பிரதான பொருளாதாரக் கொள்கையாகக் கொண்ட அரசாங்கம், கிழக்கு முனையத்தை விற்பது ஆச்சரியப்படக் கூடிய விடயமல்ல.

இலங்கையின் கடற்பகுதி கடற்போக்குவரத்தில் மிக முக்கியத்துவமுடையதாகும். இதனை உபயோகித்து அரசாங்கத்தால் இலாபம் ஈட்ட முடியும். ஆனால் அதற்குப் பதிலாக துறைமுகங்கள் விற்கப்பட்டுள்ளன. இலங்கையில் கொழும்பு, காலி, திருகோணமலை, அம்பாந்தோட்டை, காங்கேசன்துறை, பேதுருதுட்டுவ மற்றும் ஒலுவில் என 7 துறைமுகங்கள் உள்ளன. இவற்றில் பேதுருதுட்டுவ மற்றும் ஒலுவில் என்பன செயலிழந்துள்ளன. அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவிற்கு வழங்கப்பட்டுள்ளதால் அது எமக்கு உரித்துடையதல்ல. காலி மற்றும் திருகோணமலை துறைமுகங்களில் மிகக் குறைந்தளவான செயற்பாடுகளே முன்னெடுக்கப்படுகின்றன. அவ்வாறெனில் எமக்காக எஞ்சியுள்ள ஒரேயொரு துறைமுகம் கொழும்பு துறைமுகம் மாத்திரமேயாகும்.

ஆனால் கொழும்பு துறைமுகம் முழுவதும் தற்போது எமக்கு சொந்தமல்ல. இதில் 4 முனையங்கள் உள்ளன. அவற்றில் இரண்டு வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ளவற்றில் கிழக்கு முனையம் மாத்திரமே பாரிய கப்பல்கள் வரக் கூடியதும் அதிக வருமானம் ஈட்டக் கூடியதுமாகும். இதனையும் இந்தியாவிற்கு வழங்க முற்படுவது மிக மோசமான செயற்பாடாகும். இந்திய மீனவர்களின் கடும் எதிர்ப்பிற்கு உள்ளாகியுள்ள 'அதானி' என்ற நிறுவனத்துக்கு இதனை வழங்க முற்படுவது பாரதூரமான செயற்பாடாகும். சீனாவிற்கு அம்பாந்தோட்டை துறைமுகத்தை வழங்கியமைக்காக இந்தியாவிற்கு அஞ்சி கிழக்கு முனையத்தை அந்நாட்டுக்கு வழங்கி தீர்வு காண அரசாங்கம் முற்படுகிறது.



தேர்தலின் போது துறைமுக ஊழியர்களால் கிழக்கு முனையத்தை இந்தியாவிற்கு வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அதனை விற்கப் போவதில்லை எனக் கூறி வாக்குறுதியளித்தார். கோட்டாபய ராஜபக்ஷவுக்கு செய்ய முடியாதது எதுவுமில்லை என்று கூறி மக்களை ஏமாற்றி ஆட்சியைக் கைப்பற்றிய அரசாங்கம் தற்போது கையெழுத்திட்டுள்ள ஒப்பந்தத்திலிருந்து வெளியேற முடியாது என்று கூறுகிறது. இது கேலிக்குரியது.

இவ்வாறான நிலையில் துறைமுகத்தை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தி அரசாங்கம் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது. அத்தியாவசிய சேவையை ஏன் இந்தியாவிற்கு விற்க முயற்சிக்கப்படுகிறது ? இதனை இந்தியாவிற்கு வழங்கும் போது ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றமையைத் தடுப்பதற்காகவே இவ்வாறு அத்தியாவசிய சேவையாக அறிவிக்கப்பட்டுள்ளது. தேசிய சொத்துக்களை பாதுகாப்பதற்காக ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய மக்கள் தற்போது அரசாங்கத்திடமிருந்து அவற்றைப் பாதுகாப்பதற்காகப் போராடுகின்றனர்.

இலங்கையின் வறுமை நிலையை உணர்ந்து கொண்டுள்ள இந்தியா உள்ளிட்ட நாடுகள் கடன்களை வழங்கி அதன் மூலம் நாட்டை நெருக்கடிக்குள் தள்ளி தேசிய சொத்துக்களைப் பறிமுதல் செய்யத் தயாராகவுள்ளன. எவ்வாறிருப்பினும் அரசாங்கம் அனைத்து எதிர்ப்புக்களையும் மீறி கிழக்கு முனையத்தை இந்தியாவிற்கு வழங்குமாயின் அது பொருளாதார ரீதியிலும் நாட்டின் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலாக அமையும். எனவே தேசிய சொத்துக்களை பாதுகாப்பதற்காக அரசியல் பேதமின்றி அனைவருடனும் ஒன்றிணைந்து செயற்பட நாம் தயாராகவுள்ளோம். எதிர்வரும் 12 ஆம் திகதி இதற்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டமொன்றையும் முன்னெடுக்கவுள்ளோம். கிழக்கு முனையம் விற்கப்பட மாட்டாது எனக் கூறி பிரதமர் உள்ளிட்டோர் தப்பித்துக் கொள்ளப் பார்க்கின்றார்கள். தற்போது பிரதமரின் அதிகாரங்களும் குறைவடைந்துள்ளமை பல சந்தர்ப்பங்களில் நிரூபணமாகியுள்ளது. – என்றார்.

# யாழ். பல்கலைக்கழகத்தில் உடற் கல்வி விஞ்ஞானமாணி

### பட்டப்படிப்புக்கு மானியங்கள் ஆணைக்குழு அனுமதி!

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் உடற்கல்வி விஞ்ஞானமாணி கற்கை நெறியை ஆரம்பிப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகத்தின் இணை மருத்துவ விஞ்ஞான பீடத்தின் கீழ் உடற்கல்வி விஞ்ஞானமாணி கற்கைநெறியை ஆரம்பிப்பதற்கு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை, கடந்த 7 ஆம் திகதி நடைபெற்ற பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மாதாந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டு, அதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, இணை மருத்துவ விஞ்ஞான பீடத்தின் கீழ் விளையாட்டு விஞ்ஞான அலகு, புதியதொரு துறையாக உள்வாங்கப்படவுள்ளது.

1998 ஆம் ஆண்டு, அப்போதைய துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையால் உடற்கல்வி டிப்ளோமாக் கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

ஆரம்ப காலங்களில் அந்தக் கற்கை நெறி மருத்துவ பீடம், வணிக முகாமைத்துவ பீடம் ஆகியவற்றின் கீழ் மாறி மாறி செயற்படுத்தப்பட்டது. இரண்டு வருட காலத்தைக் கொண்ட டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்களை, மூன்றாம் வருடத்தில் உடற் கல்விமாணிப் பட்டதாரிகளாகப் பயிற்றுவதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், அங்கு நிலவிய உள்ளக முரண்பாடுகள் காரணமாக அது சாத்தியப்படாமல் போனது.

விஞ்ஞான பீடத்தின் கீழும், கலைப் பீடத்தின் கீழும் உடற் கல்விமாணி பட்டப்படிப்பை ஆரம்பிப்பதற்கான முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் அப்போதைய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அவை அங்கீகரிக்கப்படவில்லை.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் புதிய துணைவேந்தராக பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பதவியேற்ற பின்னர், பல்கலைக்கழகத்தின் இணை மருத்துவ விஞ்ஞான பீடத்தின் கீழ் உடற்கல்வி விஞ்ஞானமாணி பட்டப்படிப்பை நடத்துவதற்காக மூதவை, பேரவை ஆகியவற்றின் அங்கீகாரத்துடன் உடற்கல்வி விஞ்ஞானமாணி பட்டப்படிப்புக்கான முன்மொழிவு பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அந்த முன்மொழிவு, கடந்த (வியாழக் கிழமை) இடம்பெற்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மாதாந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டு, அதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**பல்கலை முன்றிலில்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அழைத்தபடி இருந்தனர்.

ஆனால் நள்ளிரவுச் சமயம் துணைவேந்தர் சிறிசற்குணராஜா பின்கதவால் வெளியேறினார் என்ற செய்தி நள்ளிரவு வரை அமர்ந்து போராட்டம் செய்தோருக்குக் கிட்டியது.

தூபி உடைக்கப்பட்ட சமயம் கொழும்பிலிருந்து யாழ் வந்து கொண்டிருந்த இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா உடனடியா நேற்று முன்னிரவு பல்கலைக்கழகப் பகுதிக்கு விரைந்தார்.

கிளிநொச்சியில் இருந்து ஶ்ரீதரன் எம்.பியும் உடனடியாக அங்கு வந்து சேர்ந்தார். இன்று அதிகாலை இச் செய்தி அச்சுக்கு போகும்வரை அவர் அங்கு போராட்டத்தில் அமர்ந்திருந்த மாணவர்களுடன் காணப்பட்டார்.

இந்த இடித்தழிப்பு முன்னெடுக்கப்பட்ட நேரம் முதல் பல்கலைக்கழக வளாகத்துக்குள் அத்துமீறிப் புகுந்து அதனைத் தடுக்க முயற்சிப்பதிலிருந்து தொடர்ந்து, இரவு வீதியில் அமர்ந்திருந்து போராட்டம் நடத்தும் விடயம் வரை முழு முனைப்புடன் களத்தில் குதித்திருந்தார் சட்டத்தரணி சுகாஷ்.

மேயர் மணிவண்ணனும் களத்தில் நின்றார். அவருடனும் பொலிஸாரும், படையினரும் முறுகி, சீற்றத்துடன் பேசி வசைபாடியமையைக் காணமுடிந்தது.

வலிகாமம் பிரதேச சபைத் தலைவர் தியாகராசா நிரோஷ், நல்லூர்ப் பிரதேச சபைத் தலைவர் மயூரன், கிளிநொச்சி – கரைச்சி பிரதேச சபைத் தலைவர் வேழமாலிதன், வலிவடக்கு பிரதேசசபைத் தலைவர் சுகிர்தன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் விந்தன் கனகரட்ணம், சுகிர்தன், யாழ் மாநகரசபை உறுப்பினர்கள் ந.லோகதயாளன், தர்ஷானந்த் போன்றோரும் களத்தில் மும்முரமாக நின்றனர்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# 1,022 அன்டிஜன் பரிசோதனைகள் 19 பேருக்கு கொரோனா தொற்று!

ஜனவரி 05 ஆம் திகதி முதல் வியாழன் வரை முகக்கவசம் அணியத் தவறியவர்கள் மீது நடத்தப்பட்ட 1,022 விரைவான அன்டிஜன் பரிசோதனையில் 19 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாக பிரதிப் பொலிஸ் மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதே காலப்பகுதியில் மேலும் 938 நபர்களும் பி.சி.ஆர் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமையுடன், அவர்களில் முடிவுகள் இன்னும் நிலுவையில் உள்ளன.

இதேவேளை முகக் கவசம் அணியத் தவறிய மற்றும் சமூக இடைவெளியை பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டுக்காக கடந்த வியாழக்கிழமை மாத்திரம் 357 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் 220 பேர் அன்டிஜன் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டமையுடன், 157 பேர் பி.சி.ஆர். சோதனைகளுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளனர்.

# மஹர சிறையில் 11 பேர் சாவுக்கும் துப்பாக்கிச்சூடே காரணம் என உறுதி

## சகலரினதும் பிரேத பரிசோதனை அறிக்கைகளும் வத்தளை நீதிவான் நீதிமன்றில் நேற்று சமர்ப்பிப்பு

மஹர சிறைச்சாலையில் இடம் பெற்ற மோதல் சம்பவத்தின்போது உயிரிழந்த 11 பேரும் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளமை உறுதியாகியுள்ளது.

வத்தளை நீதிவான் நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணைகள் நேற்று இடம் பெற்றபோதே இந்த விடயம் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிப் பிரயோகத்தால் ஏற்பட்ட கடும் காயங்களினாலேயே 11 பேரும் உயிரிழந்துள்ளனர் என்று இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்திய புத்திஜீவிகள் குழு நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த 8 பேரின் பிரேத பரிசோதனை அறிக்கைகள் இதற்கு முன்னர் நீதிமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், எஞ்சிய 3 பேரின் பிரேத பரிசோதனை அறிக்கைகள் இன்று நீதிமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட்டன.

# இலங்கையர்களை அழைத்து வர 11 முதல் விசேட விமான சேவை!

கொரோனா வைரஸ் தொற்று நெருக் கடிக்கு மத்தியில் வெளிநாடுகளில் நிர்க்கதி யாகியுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவரும் பணியில் விசேட விமான சேவைகள் ஈடுபடுத்தப்படவுள்ளன.

-இவ்வாறு அமைச்சர் நாமல் ராஜ பக்ஷ தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதற்கமைய எதிர் வரும் 11 ஆம் திகதி முதல் இவ்விசேட விமான சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

விமான சேவைகளை அதிகரிக்க ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சையடுத்து இதற்கான இணக்கம் எட்டப்பட்டது. இந்த நடவடிக்கைகளை ஆளும் கட்சியினர் கண்காணிக்கவுள்ளனர்.

எதிர்க்கட்சியினரும் இணைந்து கண்காணிப்புச் செயற்பாடுகளில் ஈடு பட்டு தவறுகளைச் சுட்டிக்காட்ட வேண் டும். அதேபோன்று, பணம் செலுத்தப் பட்டு தனிமைப்படுத்தப்படுவது கட்டாய மானதல்ல. விரும்புபவர்கள் மாத்திரம் அவ்வாறு பணம் செலுத்தி தனிமைப் படுத்தலுக்குச் செல்ல முடியும் என்றார் அவர்.

## இருபத்தாறாவது ஆண்டு நினைவு அஞ்சலி

மலர்வு 05.06.1928

உதிர்வு 09.01.1995



"உதயகிரி", பலாலி தெற்கு, வயாவிளான்.

**அமரர் செல்லத்துரை உலகநாதன் ஜே.பி.**

(ஓய்வுபெற்ற கிராமசேவையாளர்)

எல்லாரும் வாழ வேண்டும்
இல்லார்க்கு உதவவேண்டும்
உழைப்பினால் உயர வேண்டும்
உத்தமராய் இருக்க வேண்டும்
என்று சொல்லி வாழ்ந்து காட்டிய
எங்கள் தெய்வத் தந்தையே
என்றும் தொழுதிருப்போம்.

மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

CNR world wide Express
International Courier & Cargo Service.
Courier & Cargo

உள்நாடு, வெளிநாடுகளுக்கான அதிவேக, மிதவேக தபால், பொதிகள் பரிமாற்று சேவை.
அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தர வாதம்.
கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்கு பரிமாற்ற சேவை.
வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும்வசதி.
அனுப்பும் பொதிகளை இணைய தளத்தில் கண்காணிக்கும் வசதி.



இல. 401, மணிக்கூட்டு கோபுரவீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
Tel - 021 567 4145
Mob - 077 2931062

வகுப்பு



GERMAN, NETHERLAND (HOLLAND) A1 மொழி வகுப்புகள்



Embassy யின் certificate ற்கு ஏற்றவாறு, தமிழ் மொழிபெயர்ப்புடன் நடத்தப்படுகின்றது.
077 160 4823
Mrs.P.Kajenthini
இல.10, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

வேலைக்கு ஆள் தேவை
யாழ் நகரில் உள்ள நிறுவனம் ஒன்றுக்கு பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை
- 0767403814 -

## தவறிவிட்டது

சந்திரகுமார் என்பவர் நேற்றுமுன்தினம் தனது மோட்டார் வாகன அனுமதிப்பத்திரத் தினை யாழ்ப்பாணம் - ஆனைக்கோட் டைக்கு இடையில் தவறவிட்டுள்ளார். கண் டெடுப்பவர்கள் 0741235550 என்ற இலக் கத்துடன் அல்லது காலைக்கதிர் அலுவலகத் துடன் தொடர்பு கொள்ளவும்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் - 076 443 8622

Anna EXPRESS Courier Services



அண்ணா விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
077 8889388
075 3305500
070 3305500
லண்டன் ⇨ 1000/=
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)
எம்முடன் இணைந்து உங்களிடத்தில் பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | சங்கத்தானை | கனகராயன்குளம் |
| சங்கானை | பளை | மல்லாவி |
| கல்வியங்காடு | கிளிநொச்சி | மன்னார் |
| ஆவரங்கால் | புதுக்குடியிருப்பு | வவுனியா |
| நெல்லியடி | முல்லைத்தீவு | கொழும்பு |

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை



மணமகன் விவரம்
பிறந்த திகதி - 1990.09.07
மதம் - இந்து V
நட்சத்திரம் - ரேவதி
செவ் - 01இல்
பாவம் - 17
கல்வி - Engineering
தொழில் - சுவீடன் PR
எதிர்பார்ப்பு - அழகான பெண்

மணமகள் விவரம்
பிறந்த திகதி - 1995.10.10
மதம் - இந்து V
நட்சத்திரம் - அச்சுவினி
பாவம் - 28
செவ் - 1-----
கல்வி - பட்டதாரி
தொழில்-அரசாங்க உத்தியோகம்
எதிர்பார்ப்பு - அரச உத்தியோகம்

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.
குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை
077 3434 415
077 8578 528

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.01.2021 இல் வெளியிடப்பெற்றது.




# லசந்த விக்கிரமதுங்கவின் 12 ஆவது நினைவு நிகழ்வு




கொழும்பில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் 12 ஆவது நினைவுதினம் மட்டக்களப்பில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு ஊடக அமையத்தில் மாவட்ட ஊடக அமைப்பின் தலைவர் வ.கிருஷ்ணகுமார் தலைமையில் இந்த நினைவுதின நிகழ்வு இடம்பெற்றது.

இதில் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சிரேஷ்ட ஊடகவியலாளரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஊடகச் செயலாளருமான பா.அரியநேத்திரன், மட்டக்களப்பு மாநகர மேயர் தி.சரவணபவன் உள்ளிட பலரும் கலந்துகொண்டனர்.

சிரேஷ்ட ஊடகவியலாளரான லசந்த விக்கிரமதுங்க 'த சண்டே லீடர்' பத்திரிகையின் பிரதம ஆசிரியராக இருந்தபோது ஆயுததாரிகளால் 2009 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டார்.

குற்றவாளி சமூகத்தில் எந்தவொரு நிலையில் இருந்தாலும் பின்வாங்காமல் தனது பத்திரிகையூடாக லசந்த விக்கிரமதுங்க தைரியமாக வெளிப்படுத்தினார்.

இவரின் ஊடக சேவையைக் கௌரவிக்கும் வகையில் ஊடக சுதந்திரத்திற்கான யுனெஸ்கோவின் குயிலமோ கேனோ விருது மற்றும் NATIONAL PRESS CLUP, PRESS FREEDOM விருது ஆகிய விருதுகள் வழங்கப்பட்டன.

அத்துடன் இவர் கொல்லப்பட்ட பின்னரும் International Press Institute World Press Freedom Heroes விருது வழங்கப்பட்டு சர்வதேசத்தால் கௌரவிக்கப்பட்டார்.

இவரின் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் பலர் சட்டத்தின் முன்நிறுத்தப்பட்ட போதிலும் இன்னும் இந்தக் கொலைக் குற்றத்துக்கு நீதி கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

